விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை (25.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

# புதிய அமைச்சின் கீழ் பொலிஸ் துறை!

## நவநீதம்பிள்ளையின் வருகையையடுத்து

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான விஜயத்தை கருத்தில் கொண்டே சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற புதிய அமைச்சின் கீழ் பொலிஸ் துறையை அரசாங்கம் கொண்டு வந்துள்ளதாகக் கருதப்படுகின்றது.**

சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற இந்த புதிய அமைச்சு நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள மகிந்த ராஜபக்ஷ, இவ்வமைச்சின் செயலாளராக முன்னாள் படை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியை நியமித்துள்ளார்.

இதையடுத்து, இதுவரை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பொலிஸ் துறை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

உண்மைகளைக் கண்டறிவதற் (23ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்துக்கு முன் வேட்பாளர் உண்ணாவிரதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் வைத்து ஆயுதக் குழுவினால் நாம் தாக்கப்பட்டமைககு எதிராக பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் கந்தப்பர் முத்தையாப்பிள்ளை (02ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளரின் வீட்டினுள் பொலிஸ் - கொள்ளையர் மோதல்

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் இணை ஆசிரியரின் வீட்டுக்குள் நேற்று அதிகாலை புகுந்த கும்பல்



ஒன்று அவரைக் கத்தி முனையில் வைத்திருந்து தேடுதல் நடத்திய சம்பவத்தின் பின்னணி தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

சண்டே லீடர் இணை ஆசிரியர் மந்தனாவின் வீட்டுக்குள் நேற்று சனிக்கிழமை அதிகாலை நுழைந்த கும்பல், அங்கிருந்த அலுமாரிகளை உடைத்து ஆவண கோப்புகளையும் சோதனையிட்டுள்ளதாக அந்த சுதந்திர ஊடக இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக காட்டியுள்ளது.

இந்த சம்பவத்தில் குறித்த கும்பலுடன் பொலிஸார் அதிரடியாக நடத்திய மோதலில் சந்தேக நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நால்வர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

குற்றக்கும்பலால் கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்ட நான்கு பொலிஸாரும் மருத்துவமனையில் இருப்பதாக பொலிஸ்பேச்சாளர் புத்திக சிறிவர்தன கூறினார்.

நேற்று அதிகாலை இரண்டரை மணியளவில் மந்தனா இஸ்மாயிலின் (23ஆம் பக்கம் பார்க்க)

## நவநீதம்பிள்ளைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்த தேசியவாத அமைப்புகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

நவநீதம்பிள்ளையின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை திங்கட்கிழமை கொழும்பில் அமைநதுள்ள ஐ.நா செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக ராவண பலய என்ற சிங்கள பௌத்த அடிப்படைவாத அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கையின் அழகை ரசிப்பதற்கு வேண்டுமானால் நவநீதம்பிள்ளை இங்கு வரலாம். அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டோம். ஆனால், இலங்கைக்கு எதிராக அறிக்கைகளை வெளியிட அவர் முயற்சி எடுத்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று ராவண பலயவின் பொதுச் செயலளர் இத்தேகண்ட சத்ததிஸ்ஸ தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ-11)

## முகாமில் வெடிப்பு; இராணுவ வீரர் பலி முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ பயிற்சி முகாம் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு இராணுவ வீரர் பலியானதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பயிற்சியில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு வெடி பொருட்களை எப்படி கையாள வேண்டும் என்று பயிற்சி (02ஆம் பக்கம் பார்க்க)

# யாழிற்கு செவ்வாயன்று நவநீதம்பிள்ளை விஜயம்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வட பகுதிக்கு விஜயம் செய்கின்றார்.

தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்திப்பதுடன் சனிக்கிழமை காலை ஏற்பாடாகியுள்ள ஊடகவியலாளர் சந்திப்பினை அடுத்து இலங்கையிலிருந்து வெளியேறுவார்.

இலங்கையுடனான மனித உரிமைகள் விவகாரம், சமகால நிலைவரங்கள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க



ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்வதென்ற நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் ஐ.நா மனித உரிமைகள் (23ஆம் பக்கம் பார்க்க)

## 25 ஆயிரம் சிங்களவர்கள் காணாமல் போயுள்ளனர்

### சிங்கள அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னி போர் நடைபெற்ற காலத்தில் வடக்கு கிழக்கில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களவர்களை விடுதலைப்புலிகள் காணாமல்போகசெய்துள்ளமை தொடர்பான தகவல்களை நவநீதம்பிள்ளையிடம திருகோணமலையில் வைத்து தெரிவிக்க உள்ளதாக வடக்கு, கிழக்கு சிங்கள அமைப்பின் செயலாளர ஆர்.எம்.ஏ.பண்டார தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளை திருகோணமலைக்கு வருகிறார். நாங்கள் சிங்களவர்கள் காணாமல் போக செய்த புலிகள் குறித்தும், புலிகளின் திருகோணமலை அரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் மற்றும் அவரது மனைவி அனந்தி தொடர்பாகவும் தகவல்களை வெளியிடுவோம்.

அத்துடன் புலிகள் கொலை செய்த ஆயிரத்து 262 சிங்களவர்களின் பெயர் பட்டியல்கள் அடங்கிய மகஜரையும் நவநீதம்பிள்ளையிடம் கையளிக்க உள்ளதாகவும் பண்டார தெரிவித்துள்ளார். (எ-11)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 220 Pulsar Black

விற்பனைக்குண்டு

(3685)

T.P:- 0779380278



## German Institute

German, swiss மொழிகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் Goethe Institute exam-க்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.

**தொடர்புகளுக்கு:**
**10,** Palaly Road,
**ஆரியகுளத்தடி.**
T.P:-**0771604823**

(3685)


# பொலிஸ் நிலையத்துக்கு...

தம்பிராசா யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

எனினும் பொலிஸாரின் உறுதிமொழியையடுத்து அவர் தனது போராட்டத்தைக் கைவிட்டார்.

கடந்த 20-ஆம் திகதியன்று யாழ்.நகரில் வைத்து வேட்பாளர் தம்பிராசாவும் அவரது வாகனமும் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தது.

இத்தாக்குதல் சம்பவத்தினையடுத்து தன்னைத் தாக்கிய நபர்களினை கைது செய்யும் வரையில் நான் இவ்விடத்தினை விட்டு நகரமாட்டேன் எனக்கூறிய வேட்பாளர் அவ்விடத்திலேயே அமர்ந்து கொண்டார்.

எனினும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன வழங்கிய வாக்குறுதியினை அடுத்து அவர் அங்கிருந்து சென்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

எனினும் முறைப்பாடு செய்யப்பட்டு 4 நாட்களாகியுள்ள நிலையில் இதுவரை 'குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை எனக்கூறியே இவ் உண்ணாவிரதத்தினை அவர் மேற்கொண்டார்.

இவ் உண்ணாவிரதப் போராட்டம் பிற்பகல் 2.45 மணியளவில் ஆரம்பமாகி நீடித்தது.

உண்ணாவிரதம் மேற்கொள்ளும் நடுவீதியில் தனக்கு அடித்தனர் என கூறும் அவர், அவர்களுடைய புகைப்படங்களினையும் வீதியில் பரப்பி வைத்திருந்தார். பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது பொலிஸார் அவமதித்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் குறித்த வேட்பாளர் தேர்தல் சட்ட விதிகளினை மீறினார் என்ற குற்றச் சாட்டிலும், போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கின்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்படவுள்ளார் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா நேற்று மாலை தெரிவித்தார். எனினும் இரவு 7 மணியளவில் அவர் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொண்டார் (எ-4)

# முகாமில்...

வழங்கப்பட்ட போது, இந்த சம்ப வம் நடந்தது என இராணுவம் தெரிவித்தது.

தவறுதலாக ஏற்பட்ட இந்த வெடிப்புச் சம்பவத்தில் 2 இராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.

இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், படுகாயமடைந்த வீரர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.(எ-11)





## வட்டக்கச்சி - கிளிநொச்சி
## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்
## பிரமோற்சவம் - 2013

இன்று வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் 6-ம் உற்சவம் இன்று. எம் பெருமான் பகல் மோகினி வடிவமாகவும் இரவு கரிகர வடிவமாகவும் அருள் வடிவம் கொடுக்கும் திருநாள் காலை 9 மணிக்கு பகல் பூசை ஆரம்பமாகி 12 மணிக்கு நிறைவுறும். மாலைத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுறும்.

-பரிபாலன சபையினர்

(C-4443)



## தவறவிடப்பட்ட ஆவணங்கள்

உபவில் வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் இராமையா தர்ஷராகவன் ஆகிய எனது அடையாள அட்டை(923121145V) சாரதி அனுமதிப் பத்திரம் உடன் வேறு வாகன ஆவணங்களும் 22.08.2013 அன்று வட்டுக்கோட்டையில் இருந்து இணுவில் வன்னியசிங்கம் வீதிக்கிடையில் தவறியுள்ளது. இதனைக் கண்டெடுத்தோர் 0772679370/0213217376 ஆகிய தொலைபேசிகளுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். கண்டெடுத்து தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**
**வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.**
**0772679370**

(ஜ-4459)



## A/L 2013 இல் தோற்றிய மாணவர்களிற்கு அதிரடியான கட்டணச்சலுகையுடன் வெளிநாட்டுக் கல்வி

- சைப்பிரசில் படித்துக் கொண்டே இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்.
- நியூசிலாந்தில் 2 வருடங்கள் படித்து PR பெறலாம். PR பெற்றபின் ஆஸ்திரேலியா குடிபெயரலாம்.
- 2 இலட்சம் வேதனம், உணவு, இருப்பிடம் இலவசம்.

டென்மார்க்கில் படிக்க உழைக்க வாய்ப்பு.

விரைந்து வாருங்கள்.

ஏழு நாட்களும் திறந்திருக்கும்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

(C-4457)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

**Western Union** மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-4433)



## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm - 250 /=

தினமும் **12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ, அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு:** 150/- **அசைவ உணவு** 180/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4434)



## 2 இலட்சம் வேதனத்துடன்

கொலண்டில் படிக்க உழைக்க சட்ட ஆலோசனை

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(எல்லா நாட்களும் திறந்திருக்கும்)

(C-4457)


## மரண அறிவித்தல்

### ஸ்ரீமதி நகுலேஸ்வரி அம்மா
### மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாயுஜ்யமடைந்த மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்களின் துணைவியார் ஸ்ரீமதி நகுலேஸ்வரி அம்மா நேற்று முன்தினம் (23.08.2013) வெள்ளிக்கிழமை சிவபத மெய்தியுள்ளார்.

அன்னார் சிவசாயுஜ்யமடைந்தவர்களான குமாரசாமிக்குருக்கள்-அன்னம்மா தம்பதியரின் புத்திரியும், சிவசாயுஜ்யமடைந்த மகாராஜஸ்ரீ ஷண்முகநாதக்குருக்களின் அன்பு மனைவியும், சிவசாயுஜ்யமடைந்த வேதநாயகி அம்மாவின் மைத்துனியும், ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் (கீரிமலை நகுலேஸ்வர ஆதீனம்), சிவசாயுஜ்யமடைந்த காமாட்சியம்மாள், சாரதாம்பாள் மற்றும் அமிர்தாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினசபாபதிக் குருக்கள், கனகசபாபதிசர்மா, திரிபுரசுந்தரி, சிவசாயுஜ்யமடைந்த காண்டீப சர்மா மற்றும் சாண்டில்யசர்மா, வாருணிதேவி, பிரியதர்சினி, பரமேஸ்வரசர்மா, ஜெகதீஸ்வரி, வந்தியதேவசர்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாவதி, ஜெயந்தி, சுப்பிரமணியசர்மா, செல்வராணி, கைலாயநாதகுருக்கள், சங்கர் ஐயர், வாகீஸ்வரி, பிரதீபன்சர்மா, சோபிதா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாவை ஆதீனம்** (3684) **தகவல்:குடும்பத்தினர்.**


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே.: 0213210815
E-mail: valampurii@yahoo.com



## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணித் தரம் வாய்ந்த உயர்தர HOTEL இற்கு பணியாளர்கள் தேவை.

01. கணக்காளர்
    கணக்குப் பதிவாளர் } ஆண்/பெண்

**கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது**

02. களஞ்சியக் காப்பாளர் -ஆண்கள் மட்டும்

▸▸ விண்ணப்பங்களை தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 30.08.2013 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிற்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இலக்கம் 3683**
**வலம்புரி பத்திரிகை**
**இல. 3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(3683)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவில்லாத அரசியல்வாதிகளால் நாட்டுக்கு அழிவே ஏற்படும்-பொன்சேகா

(கொழும்பு)

பிரதேச சபைகள் முதல் நாடாளுமன்றம் வரையிலுள்ள அரசியல்வாதிகளில் பலர் ஒழுக்கம் கெட்டவர்களாகவும் வன்முறையாளர்களாகவும் உள்ளனர். இவ்வாறு ஜன நாயக கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கண்டி வத்தேகம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி அற்ற, ஒழுக்கமற்ற மற்றும் அறிவற்ற அரசியல்வாதிகள் நாட்டுக்கு அழிவையே ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

பிரேதேச சபைகளில் இன்றுள்ள அரசியல்வாதிகளில் எத்தனை பேர் வழக்குகள் இன்றி ஒழுக்கக் கேடான விடயங்களில் சம்பந்தப்படாதுள்ளனர்.

நாடு இன்று வெளிச்சத்தில் இருந்து இருளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் தமது கடமையை மக்களுக்கு சரிவர செய்வதில்லை.

இதனால் மக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் கீழ் மட்டத்திற்கு சென்று கொண்டிருக்கின்றது. 20 மில்லியன் மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தலைமுறை தலைமுறைகளாக இந்த கஷ்டங்கள் அதிகரிக்குமேயன்றி குறையாது. நாட்டின் அரசியல் இன்று அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பவர்களின் சொத்தாக மாறி விட்டது.

தேர்தல் என்று அறிவிக்கப்பட்டால் அமைச்சர்களின் பிள்ளைகள், மனைவிகள் அல்லது மைத்துனர்கள் இத் தேர்தலில் களமிறக்கப்படுகின்றனர்.

அரசியலை தமக்கான ஒன்றாக மாற்றிக் கொண்டுள்ள இவர்கள் வேறு எவரையும் அந்த இடத்திற்கு வரவிடுவதில்லை என்றார். (அ-2)

# சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன

(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சட்ட விரோதமான 36 ஆயிரம் சிகரெட்டுக்களை காத்தான்குடி பொலிஸார் நேற்று கைப்பற்றியதுடன் அவற்றினை வைத்திருந்த் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பிரசன்னாவின் உத்தரவின் பேரில் சென்ற காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை தடுப்பு பிரிவினர் இந்த சிகரெட்டுக்களை கைப்பற்றியுள்ளனர்.

காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள சில்லறைக்கடை ஒன்றின் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இவை மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## விசேட தேவையுள்ளோருக்கு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டோர், நிரந்தர படுக்கை நோயிலுள்ளவர்கள், போக்குவரத்து செய்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றவர்கள் ஆகியோரை பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைப் பிரிவில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார்.

இவ்வாறான தேவையுடையோர்களுக்கு கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினூடாக உதவிகள் பெற்றுக் கொடுப்பதற்கு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-9-60)

## பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

கரவெட்டிசுடர்ஒளி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கழக மைதானத்தில் கழகத் தலைவர் இ.கலைச் செல்வன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி, சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி மின்சார சபையின் மின் அத்தியட்சகர் கே.இராஜேஸ்வரன் , நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.என். டபிள்யூ. ரி. ஹாங்கரா , நெல்லியடி கிழக்கு கிராம சேவையாளர் கே.ரதீசன் , ஞானசாரியார் கல்லூரி அதிபர் ப. செல்வவிநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-24)

## யாசகர்களுக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள யாசகர்களில் 100 பேரை வீரவிலவிற்கு மாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீரவிலவிலுள்ள புனர்வாழ்வு நிலையத்திற்கே இவர்கள் அழைத்து செல்லப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக நீதிமன்றத்தின் உத்தரவை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## அறிவித்தல்

*மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)*
*வட்டாரம்: 05 ஆதன இலக்கம் : 70*
*வீதி : விளாத்தியடி றோட்*

வட்டாரம் 05 விளாத்தியடி றோட் ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 70 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி. மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை 'சாமிச்சாட்டி' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜெயக்குமார் பெண் ஜெயவதனி என்பவர்களால் அறுதி உறுதி மூலம் பரமேஸ்வரன் கைம்பெண் வசந்தகுமாரி என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் நிறைவேறிய 3865 ஆம் இலக்க 02.03.2010 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள். இவ் 'சாமிச்சட்டி' நிலப்பரப்பு 02 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் பரமேஸ்வரன் கைம்பெண் வசந்தகுமாரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

*தவிசாளர்,*
*வலி.தென்மேற்கு, பிரதேசசபை, மானிப்பாய்.* (சி-4456)


வடமாகாண சபைத் தேர்தல் 2013



கிளிநொச்சி மாவட்டம்

கலவரங்களால் இடம்பெயர்ந்த
மலையக மக்களை
நிரந்தரமாக குடியேற்ற
காரணமாக இருந்த.....

வீ.ஆனந்தசங்கரி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)



X 2

(CE-4911)



செலான் வங்கி ஊடாக உங்களுக்கும் ஹொண்டா ட்ரீம் யுகா மோட்டார் சைக்கிள்

லீசிங், கடன் அல்லது கடனட்டை இவற்றில் உங்களுக்கு இலகுவான மீளச்செலுத்தும் முறையை தெரிவு செய்யுங்கள்

SEYLAN SMART Lease — ஒவ்வொரு ரூ.100,000/= க்கும் மாதாந்த லீசிங் தவணைக்கட்டணம் ரூ.5,185/=

LOAN — ஒவ்வொரு ரூ.100,000/= க்கும் மாதாந்த தவணைக்கட்டணம் ரூ.5,238/=

செலான் கடனட்டை மூலமாக இலகு தவணை கொடுப்பனவு முறைகள்




விலை ~~ரூ.229,500/=~~
செலான் இலகு தவணை கொடுப்பனவு ஊடாக விசேட விலை
ரூ.199,500/=

நீங்களும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட வசதிகளின் ஊடாக எந்தவொரு ஹொண்டா மோட்டார் சைக்கிளையும் கொள்வனவு செய்ய முடியும்.

அருகிலுள்ள ஹொண்டா விநியோகஸ்தர் நிலையத்திற்கு அல்லது செலான் வங்கி கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

011 2008888

லீசிங் வசதிகள் மற்றும் கடன் வசதிகள் 24 மாதங்களுக்கு கணக்கிடப்பட்டுள்ளது.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

HONDA

இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ : 011-7607200
மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொலைபேசி: 065-7607[illegible]
மற்றும் நாடளாவிய ஹொண்டா விற்பனையாளர் வலையமைப்பினூடாக

25 ஆண்டுகால 1988 - 2013
Web:www.eseylan.com
www.facebook.com/SeylanBank

செலான் டவர்ஸ், இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: +94 11 2456000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல்: info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating "A-(lKa)"
நிறுவன பதிவிலக்கம்: PQ 9
செலான் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையின் கீழ் செயற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

(சி-4450)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதி இழைக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நவநீதம்பிள்ளையால் தீர்வு கிடைக்கும்

## உலக தமிழினம் காத்திருக்கிறது என்கிறார் ராமதாஸ்

இலங்கைக்கு இன்று விஜயம் மேற்கொள்ளும் ஐ.நா சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, தமிழர் பிரதேசங்களிலிருக்கும் படைகளை அகற்றுமாறு ஆணையிடவேண்டுமென பா.ம.க. நிறுவநர் மருத்துவர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற வன்னிப் போரின் போது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டனர். போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் முடிவடைந்து விட்ட நிலையிலும், இனப்படுகொலையை நடத்திய இலங்கை அரசு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந் நிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பத்தகுந்த வகையில் விசாரணை நடத்தும்படி இலங்கை அரசுக்கு ஆணையம் ஆணையிட்டது.


இந்த விசாரணையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நவநீதம்பிள்ளை இன்று முதல் ஒரு வாரத்திற்கு இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். இவரின் பயணத்தால் தமிழர்களுக்கு ஓரளவேனும் விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையில் போர் நிறைவு பெற்ற போதிலும், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஆறு தமிழர்களுக்கு ஒரு இராணுவ வீரர் வீதம் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மிகக் கொடுமையான மனித உரிமை மீறல் குறித்து நவநீதம்பிள்ளை விசாரணை நடத்துவதுடன், வடக்கு மாநிலத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்றும்படியும் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களவர்கள் திட்டமிட்டு குடியேற்றப்பட்டு வருவதை நிறுத்தும்படியும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆணையிட வேண்டும்.

போரின் முடிவில் சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியத் தலைவர்கள் இலங்கை இராணுவத்தால் கடந்த 4 ஆண்டுகளாக விசாரணை என்ற பெயரில் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அதேபோல் யுத்தத்தினால் கணவர்களை இழந்த 90 ஆயிரம் கைம்பெண்களும் பல்வேறு வகையான துயரங்களை சந்தித்து வருகின்றனர்.

நவநீதம்பிள்ளை இவர்களைச் சந்தித்து பேசுவதுடன், சிறைவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களை விடுதலை செய்யும்படியும், கைம்பெண்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை அமைத்து தரும்படியும் இலங்கை அரசுக்கு உத்தரவிட வேண்டும்.



வடக்கில்வாழும் தமிழப் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் தொடர்கிறது. இதைத் தடுக்கும் வகையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சர்வதேச மனித உரிமை பார்வையாளர்களை நிறுத்த வேண்டும்.

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளும், இரசாயன குண்டுகளும் வீசப்பட்டமை குறித்தும் விசாரணை நடத்த வேண்டும். இந்த விசாரணைகளை ஒரு வார பயணத்தில் முடிக்க முடியாது என்பதால் இதற்காக சர்வதேச விசாரணைக்குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டும். இதுதவிர, இலங்கையின் பொதுவான மனித உரிமை சூழல், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவை குறித்தும் விசா ரிக்க வேண்டும்.

உலகின் அதிகாரம் படைத்த நாடுகளின் துணையுடன் போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க இலங்கை அரசு முயன்று வருகிறது. இத்தகைய சூழலில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நவநீதம்பிள்ளையால் மட்டுமே நீதி பெற்றுத்தர முடியும் என்று உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் நம்புகின்றனர்.

எனவே, இலங்கையில் நிலவும் உண்மையான சூழலை உலகிற்கு எடுத்துக் கூறவும், அதற்கு காரணமானவர்களுக்கு தண்டனை பெற்றுத் தரவும் இந்த பயணத்தை நவநீதம்பிள்ளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார். (அ-2)

# வாரம் ஒரு தகவல்

## இரவல் பேனா

"சேர்! ஒரு நிமிடம் உங்க பேனாவைத் தர்றீங்களா?

"ம்... இந்தாங்க"

"என்ன சேர் இது... மூடியைக் கழற்றி விட்டு பேனாவை மட்டும் கொடுக்கிறீங்க?"

"அது என் பழக்கம் சேர்"

ஜப்பானில் ஒரு புதுவிதமான பேனா விற்பனைக்கு வந்திருக்கிறதாம். கேள்விப்பட்டீங்களா?"

"இல்லையே!"

அது எப்படியென்றால்... பேனாவின் மேல் பக்கத்தில் வட்டமான அளவில் பற்றரியால் இயங்கக்கூடிய சின்ன மின் விசிறி உள்ளதாம்."

"எதற்கு அந்த மின்விசிறி?"

"எழுதிக் கொண்டிருக்கும் போது அந்த மின்விசிறி சுழலும்! சிகரெட் புகையை விரட்டி அடித்து விடும். புகையில்லாத காற்றை நாம் சுவாசிக்கலாம்."

"அதாவது... பக்கத்திலிருப்பவர்கள் புகைப்பிடித்தாலும் அந்தப் புகை நம்முடைய முகத்துக்கு நேராக வராது இது காப்பாற்றும் அப்படித் தானே!"

"அது மட்டுமல்ல சேர்! பேனா இரவல் வாங்கினால் அதை அப்படியே எடுத்துக் கொண்டு போய் விடுபவர்களும் அதிகம். அதனால் நான் எப்பொழுதும் முன் ஜாக்கிரதையாக மூடியைக் கழற்றிக் கொண்டு பேனாவை மட்டும் தான் மற்றவர்களுக்குக் கொடுப்பேன். அதனால் என்ன ஆச்சு தெரியுமா?"

"என்ன ஆச்சு?"

"இது வரைக்கும் 234 பேனா மூடிகள் என்னிடம் சேர்ந்து இருக்கிறது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

25.08.2013
(ஆவணி 09, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 3.45 மணிவரை
ரேவதி பிற்பகல் 12.11 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இரண்டாம் ஆவணி ஞாயிறு

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்** பிரியமான சிலருக்காக செலவுகள் ஏற்படலாம், இடமாற்றங்களால் மனச்சோர்வு ஏற்பட்டு உற்சகம் குறையும், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பயணத்தால் நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள், சுப் செய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையலாம், பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, சஞ்சலங்கள் தீர ஆதவனை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்** பிற இனத்தவர்களால் பெருமை சேரும் நாள், தொழில் நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள்.

**விருச்சிகம்** பகைவர்கள் விலகுவர், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும், உடன் பிறப்புக்கள் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் கைகூடும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் பெருகும் நாள், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லலாம், பயணங்கள் கைகூடும், பொருளாதார நலன் கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்** குடும்பத்துக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்கும் எண்ணம் உருவாகும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 80-160 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 100 |
| கரட் | 100 | 100 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 165 | 120-140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 155 | 100 | 160 |
| பாகற்காய் | 60 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 80 | 100 | 120 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 120 |
| போஞ்சி | -- | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 30 |
| தேசிக்காய் | 350 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தரத்தின் பின்னர்



## டிப்ளோமா கற்கைநெறிகள்

(சி/4442)

சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே IT டிப்ளோமா

DiTEC INTERNATIONAL **Diploma in Information Technology**

மேலதிக BCS, Edexcel - UK சான்றிதழ்கள்

DiE **Diploma in English**

ஆங்கில மொழியாக்கத்திலான DVD தட்டு ஒன்று இலவசம்

பாடநெறிக் காலம் : 4 மாதங்கள்

- Diploma in Web Engineering
- Diploma in Software Engineering
- Diploma in Computerized Accounting
- Diploma in Business Management

edexcel Assured

## பட்டப் பாடநெறிகள்

BIT **Bachelor of Information Technology (UCSC)**

இம்முறை உயர் தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பெறுபேறுகள் வரும் முன்னரே இப்பட்டத்திற்கு இவ்வாண்டிலேயே பதிவுகளை செய்து கொள்ளலாம்.

பாடநெறிகள் தொடர்பாக மேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.
**077 990 56 11**

bcs The Chartered Institute for IT **Higher Education Qualifications**

இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் பிரித்தானிய கௌரவ பட்டத்திற்கு நிகரான தகமையினை இதனால் பெற்றுக்கொள்ளலாம்

edexcel **HND (Higher National Diploma)**

பிரித்தானிய பட்டத்திற்கான இறுதி ஆண்டில் இணைந்து கொண்டு, அதனை முழுமைப்படுத்த சந்தர்ப்பம் இதனால் வழங்கப்படும்.

**புதிய பிரிவுகள்**
**2013.09.06**
காலை 9:00 மணி

**FREE** Pendrive & T-Shirt

ESOFT - இலங்கையின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப கற்கை வலயமைப்பு

ESOFT Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO CAMPUS**
**No.137, K.K.S Road, Jaffna**
**Tel : 021 222 4142 | 021 750 1120**

**50 Branches Island wide**

துரித அழைப்பு : 077 309 9 308 www.esoft.lk Follow us facebook.com/ESOFTColombo



# NORTH LANKA IIT

## வழங்கும் அரிய சந்தர்ப்பம்!

SRI LANKAN UGC APPROVED CERTIFICATE! Business University - Costa Rica

**50% Scholarship!**

நீங்களும் கணினிப் பட்டதாரியாகுங்கள்!

- *** B.Sc. in Comp. Sc.**
  Qualification:- HND or O/L or A/L
  Duration:- 1 - 3 Years
- *** M.Sc.**
  Duration:- 01 Year
- *** MBA**

**Special Batch!**

**கல்வியியற் கல்லூரி மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட பிரிவு!**

**சலுகைக் கட்டணத்தில் ....**

(c-4438)

பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற மாணவர்களுக்கு North Lanka IIT இனது வாழ்த்துக்கள்!

#113, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Tel: 0215677774 Mob: 0777592666



# விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

**UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway**

Switzerland, Sweden etc... மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் புதிய நிபந்தனைகளும், விதிமுறைக்கமைய விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## Student Visa

**மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சென்று படிப்பதற்கும் பகுதி நேர வேலைவாய்ப்பு மற்றும் அந்த நாட்டில் Settle ஆக விரும்புகின்றவர்களுக்காக:**



- படிப்பதற்கு வயது எல்லை இல்லை. சரியான காரணமே போதுமானது.
- **Minimum Qualification O/L** மற்றும் ஏதாவது பாடநெறி படித்திருந்தால் நன்று இடைவெளி இருந்தால் கவலைப்பட தேவையில்லை.
- **IELTS** தகைமை தேவையில்லை, இருந்தால் மிக நன்று
- உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப மிகக் குறைவான செலவில் **TOP University, A Grade College** செல்வதற்கான வாயப்பு.
- உங்களுடன் உங்கள் உதவிக்கு யாராவது உறவினர்களை அழைத்து செல்ல விரும்புகின்றீர்களாயின் அதற்கான வசதிகள் செய்து தரப்படும்
- உங்கள் கல்வி செலவுக்கு போதுமான பணத்தை அரசவங்கியினூடாக கடன்ாகப் பெற்றுத்தரப்படும்.
- வங்கியில் பணவைப்பு, **Airport Pickup, Accommodation,** மற்றும் உங்கள் ஏனைய குறைபாடுகள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்.

## Visit Visa

**சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அவமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.**

தாமதமாகிய விசாக்கள் - திரும்பிய விசாக்கள் உள்ளதா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

***Refused? Rejected?***

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் வீசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் இது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.



- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- வீசா விண்ணப்பபடிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travels Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

**வங்கியில் பணவைப்பு**
Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின் ) பணவைப்பு

**Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals / New Applications etc...**

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கீகயான முறையில் ஆலொசனைகளை பெறலாம்.
**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

FLEX Graphic

ஐரோப்பிய 25 நாடுகளில் (SENAGON COUNTRY ) 5 வருட அல்லது 2வருடத்திற்கான வதிவிட விசா (RESIDENT VISA) தனியாக அல்லது முழுக்குடும்பத்துடன் குறுகிய காலத்திற்குள் செல்வதற்கு விசா பெற்றுக்கொள்வதற்கான உதவிகள் செய்து தரப்படும்.

SKYWALK Visa Solutions (4449)

**ஸ்கைவோர்க் விசா சொலூஷன்** **07777 11905**

No.63, 1/2, Galle Road, Dehiwala (Food City - 1st Floor)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



(சூடான்)

சூடான் நாட்டில் பெய்து வரும் கனமழையை அடுத்து மக்கள் குடியிருப்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் 3 இலட்சத்திற்கு மேற்பட்டோர் தங்கள் உடைமைகளை இழந்து தவிக்கின்றனர்.

# சூடானில் வெள்ளப்பெருக்கு; 3 இலட்சம் மக்கள் தவிப்பு

இதுவரையில் 53 பேர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளரென உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. சூடானில் மிகப்பெரிய பேரழிவு ஏற்பட்டுள்ளதாக அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக கர்டோம் மாகாணத்தில் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள நைல் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குடியிருப்பு பகுதியில் தண்ணீர் புகுந்தது. அங்குள்ள மக்கள் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் தவிக்கின்றனர்.

இதுகுறித்து உள்துறை அமைச்சர் இப்ராகிம் முஹமது ஹமீது கூறுகையில், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை மழையால் 53 பேர் இறந்துள்ளனர் என்றார். (அ-2)

## சிரியாவிலிருந்து

# அகதிகளாக 10 இலட்சம் குழந்தைகள் வெளியேறியுள்ளனர் - ஐ.நா. தகவல்

சிரியாவிலிருந்து அகதிகளாக வெளியேறும் குழந்தைகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தைத் தாண்டியிருப்பதாக ஐ.நா. சர்வதேச குழந்தைகள் கல்வி நிதியத்தின் தலைவர் ஆன்டெனி லேக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

இத்தனை குழந்தைகளும் தமது வீட்டிலிருந்தும், தமது குடும்பத்திலிருந்தும் பிரிந்து வந்து பேராபத்துக்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இவர்களது எண்ணிக்கை 10 இலட்சத்தை எட்டிய பின்னர் தான் நாம் அவர்களது அவல நிலையை உணரத் தொடங்கியிருக்கிறோம்.

சிரியாவில் இரண்டு வருடங்களுக்கு மேலாக யுத்தம் நடைபெற்று வருவதால் அங்கிருந்து புலம் பெயரும் அகதிகளில் அரைவாசி பேர் குழந்தைகள் என்று ஐ.நா. புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

பெரும்பாலான சிரிய அகதிகள் லெபனான், ஜோர்டான், துருக்கி, ஈராக், எகிப்து ஆகிய நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். இருப்பினும் அவர்கள் வட ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்வதும் வேகமாக அதிகரித்து வருகிறது.

சிரியாவில் உள்ள இளம்பராயத்தினர் தங்கள் வீடுகளையும், குடும்பத்தையும் எதிர்காலத்தையும் இழந்து வருகின்றனர். அவர்கள் பாதுகாப்பு தேடி எல்லை தாண்டி வந்தாலும் இன்னும் நடுக்கத்திலேயே உள்ளனர். வாழ்வுக்கான நம்பிக்கையைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

போரிலிருந்து தப்பி வந்தபோதிலும் இக்குழந்தைகள் எதிர்காலத்தில் இளம் வயதிலேயே திருமணம் செய்விப்பது, குழந்தைத் தொழிலாளர்களாக்கப்படுவது, பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது போன்ற வன்முறை சார்ந்த ஆபத்துக்களை பெரிதும் எதிர்நோக்கியுள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

இக்குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஏராளமான தொண்டு அமைப்புகள் பல ஐ.நா. முகாம்களில் குவிந்துள்ளன. (அ-2)

# பேருந்து கவிழ்ந்ததில் 34 பேர் உயிரிழந்தனர்



(கோலாலம்பூர்)

மலேசியாவில் 200 அடி பள்ளத்தில் பேருந்து ஒன்று கவிழ்ந்து நொருங் கியதில் 2 இந்தியர் உட்பட 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலேசியாவில் கோலாலம்பூரில் இருந்து சுற்றுலா பேருந்து ஒன்று, பொழுதுபோக்கு பூங்கா அமைந்துள்ள கெந்திங் ஐலண்ட் என்ற மலை வாசஸ்தலத்துக்கு சென்று கொண்டிருந்தது. பேருந்தில் இந்தியா, சீனா, வங்கதேசம், கனடா உள்ளிட்ட பல நாடுகளை சேர்ந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் 54 பேர் பயணித்தனர். மலை பாதையில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வளைவில் வந்த லொறிக்கு பாதை விடுவதற்காக பேருந்தை சாரதி திருப்பியுள்ளார். இதன்போது கட்டுப்பாட்டை இழந்த பேருந்து சாலையின் அருகே இருந்த சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்ததில் பேருந்து நொருங்கியது. இதில் பயணம் செய்த 34 பேர் சம்பவ இடத்திலேயே இடிபாடுகளில் சிக்கி பலியாகினர்.

விபத்தில் படுகாயம் அடைந்த பயணிகள் கோலாலம்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக சுகாதார துறை அதிகாரி தெரிவித்தார். (அ-2)

# இரசாயன ஆயுத தாக்குதல் மனித குலத்திற்கு எதிரானது - ஐ.நா. சபை பொதுச் செயலாளர்

சிரியாவில் நடந்த இரசாயன ஆயுதத் தாக்குதல் மனித குலத்துக்கு எதிரானது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

தென்கொரியத் தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.நா. சபையின் நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்;

சிரியாவில் இராணுவத்தினர் நடத்திய இரசாயன தாக்குதலில் நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்ததாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து காலம் தாழ்த்தாது விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிரியாவில் நடந்த இரசாயனத் தாக்குதல் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. உலகில் இரசாயனத் தாக்குதலை யார் நடத்தினாலும் அது மனித குலத்துக்கு எதிரான குற்றம். அது, சர்வதேச சட்டங்களை மீறுவதாகும். இதுபோன்ற தாக்குதல்கள் சர்வதேச நாடுகள் முன் உள்ள சவாலாகும். அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை தர வேண்டும்.

இது குறித்து விசாரிக்க ஐ.நாவின் படை வலிமை குறைப்பு விவகாரங்களின் தூதுவர் ஏஞ்செலா கேனை டமாஸ்கஸ"க்கு உடனடியாகச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளேன். உண்மையைக் கண்டறிவதற்கான இந்த வாய்ப்பை இரு தரப்பினரும் (அரசு மற்றும் அரசு எதிர்ப்புப் படையினர்) மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன் என்று தெரிவித்தார்.

சிரியாவில் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று ரஷ்யா ஏற்கனவே தெரிவித்திருந்தது. இந்நிலையில், பான் கீ மூன் இவ்வாறு தெரிவித்திருப்பது சிரிய ஜனாதிபதிக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து உறுதியாகத் தெரியவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. அது குறித்து விசாரிக்க உளவு அமைப்புகளுக்கு அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் இராணுவத்தினர் கடந்த புதன்கிழமை நடத்திய இரசாயனத் தாக்குதலில் ஆயிரத்து 300 பேர் இறந்ததாக எதிர்க்கட்சியான சிரியாவின் தேசிய கூட்டணி குற்றம் சாட்டியது. ஆனால், இக்குற்றச்சாட்டை அரசு தரப்பு மறுத்துள்ளது என்றார்.



இதேவேளை, சிரிய இரசாயனத் தாக்குதலையடுத்து அமெரிக்காவின் ஏவுகணை தாங்கி போர்க் கப்பல் ஒன்று மத்தியத்தரைக்கடல் நோக்கி விரைந்துள்ளது. ஏற்கனவே அப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் மூன்று நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இருந்தும் சிரியாவிற்கு எதிராக எந்த தாக்குதலையும் தொடுக்க ஆயத்தமாக இருக்கும்படி எங்களுக்கு உத்தரவும் வரவில்லை என்று அங்குள்ள அமெரிக்க கப்பற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சிரியாவில் பொதுமக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதாக குற்றம்சாட்டி வரும் அமெரிக்கா சிரியாவிற்கு எதிராக தாக்குதல் நடத்த தீர்மானித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.இ.சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் பயிற்சி வகுப்புக்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினரால் சிங்களம், ஆங்கிலம், கணனி மென்பொருள் ஆகிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி வகுப்புக்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் நடத்தப்படவுள்ளன. இவ்வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புபவர்கள் நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் கைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி இளைஞர் கழக சம்மேளனத்தின் காரியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும். இப் பயிற்சி நெறியில் பங்குகொள்ள வயது எல்லை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9-37)

# 84 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இருவர் கைது

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் முக்கிய போதைப் பொருள் விற்பனையாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

84 இலட்சம் ரூபா பெறுமதியான 1.3 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. நீண்ட காலமாக கண்காணிக்கப்பட்டே இச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை கொழும்பு கல்கிஸை பகுதியில் 50 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர் கொலை குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுதலையானவர் என பொலிஸார் கூறினர்.

கார் ஒன்றில் போதைப் பொருளை எடுத்துச் சென்ற போதே இவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (அ-2)


## Smat Phone வாடிக்கையாளர்களே...

உங்களது கையடக்கத் தொலைபேசியின் பாவனையின் போது அதனை பாதுகாப்பதில் பெரும் சிரமத்திற்கு ஆளாவதை நாம் அறிவோம்.

இவ்விடயத்தை கருத்தில் கொண்டு உங்களது Smart கையடக்க தொலைபேசிக்கு பாதுகாப்பை நாம் வழங்குகின்றோம்.

அந்த வகையில் வண்ணத்திரை பாதுகாப்பிற்கு Anti broken Stricker, நவீன பாதுகாப்பு பவுச் (Pouch) வெளியில் செல்லும்போது சார்ஜ் செய்வதற்கு Power Bank மற்றும் I Phone 4S,5 Unlock செய்வதற்கான X-Sim இவற்றை பெற்றுக்கொள்வதற்கு யாழ்.நகரில் நாட வேண்டிய இடம்.

*R & R Telecom (Pvt) Ltd,*
127, MPCS Building, K.K.S. Road, Jaffna.
0722441441, 021 2221644

(ß682)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கந்தன் கருணை

## அன்னதான மண்டபம்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

21.08.2013 அன்று செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற கந்தன் கருணை அன்னதான மண்டப அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள் விபரம்:

முதலாம் பரிசு - 04780 இரண்டாம் பரிசு - 21523

மூன்றாம் பரிசு - 05785

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கம்: 17045, 10543, 03623, 22143, 28696

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இல: 0773697078, 0777582743

குறிப்பு: 14 நாட்களுக்குள் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆதரவளித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

கந்தன் கருணை
அன்னதான மண்டப நிர்வாகிகள்

(சி- 4437)



## The Jaffna Academy & School of Technology and St. John's College Jaffna




## PRELIMINARY COURSE IN ENGLISH

- A three-month English Course for School leavers/Job seekers
- The course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the course.
- Free Handouts.

*Commencement: 9th Sept 2013*

*Lessons on Weekdays from 3.30 - 5.30 p.m.*

(C-4436)


# ஆயுர்வேத உத்தியோகத்தர்களை விசேட தரத்துக்கு தரமுயர்த்துதல்

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை விசேட தரத்துக்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவை பிரமாணக் குறிப்பில் உள்ள படி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி அறிவித்தலின் படி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மத்திய அரசில்/ மாகாண சபையில்/ உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை **www.ayurvedu.gov.lk** இலிருந்து பெற்று அல்லது சுயமாக தயாரித்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் ஆயுர்வேத ஆணையாளர் , ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மஹரகம என்னும் முகவரியில் சமர்ப்பிக்கவேண்டும்.

இத்தரமுயர்த்தல் தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (அ)


## A/L பரீட்சைகளின் பின் தகவல் தொழினுட்ப கல்விக்கு அதிகம் ஏன் செலவிட வேண்டும்

Mega ஸ்கொலர்ஷிப் you can Win 75%

புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றுங்கள்

Sept. 8th ஞாயிறு

30 நிமிடங்களில் 30 MCQ பொதுஅறிவு வினாக்களுக்கு விடையளித்து நீங்கள் விரும்பிய கனினி டிப்ளோமா ஒன்றை தெரிவுசெய்யுங்கள்.

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

இலவச அனுமதிகளுக்கும் விபரங்களுக்கும்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677 |
| நெல்லியடி | கொடிகாமம் வீதி, 021-2262399 |
| சாவகச்சேரி | கட்டுக்காணி வீதி, 021-2270267 |
| கிளிநொச்சி | A9 வீதி, ஆனந்தபுரம், 021-2283925 |
| வவுனியா | 192, குருமண்காடு சந்தி, 024-2226050 |

(சி/4445)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 2 செவ் 8தகைமை/தொழில்: A/L<br>ஜேர்மனி PR<br>தொ.இ:B2278 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'4" செவ் 7<br>தகைமை/தொழில்: Facial, Make up<br>தொ.இ:G2282 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா :32 சூ,செவ் 6<br>உயரம்: 5'7"<br>தகையை/தொழில்: A/L, NIBM Logistic Officer NGO<br>தொ.இ:B2281 | பிறப்பு: 1978 இந்து(v)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா : 40.75<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Following Degree<br>தொ.இ:G2283 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்<br>அவுஸ்திரேலியா PR<br>தொ.இ:B2284 | பிறப்பு: 1978 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Data Entry<br>அவுஸ்திரேலியா PR<br>தொ.இ:G2285 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்:உத்தராடம் 1<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>வியாபாரம்<br>தொ.இ:B2287 | பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா :55 செவ் 8<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BFA, PGD<br>ஆசிரியை<br>தொ.இ:G2286 |

சகல தொடர்புகளுக்கும்:-

## கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி



## புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

Rs.10

## ஷைலோ ஐஸ்கிறீம்

No.231 , Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்பாதம்



## ஆன்மீகம் 96

ராஜா மேலை நாட்டிலே ஒரு உலகப் புகழ் பெற்ற நாத்திகர் ஒருவ் சாமியார்களை கிண்டல் செய்ய ஒரு கதை சொன்னார். ஒருமனிதன் உழைப்பிற்கு வழிதெரியாமல் பிறந்த ஊரைவிட்டு பிழைப்பு தேடி வெகு தூரம் சென்றாராம். வழியில் எங்கும் அவன் பிழைப்பிற்கு வழி கிடைக்கவில்லை. ஒருமுறை ஆளரவமற்ற அத்வானமான பகுதியை கடந்து வரும்போது வழியில் ஒரு கழுதை செத்துக்கிடந்ததாம்.

அதைப் பார்த்த அந்த மனிதன் அநாதையா கிடக்கும் கழுதையைப் பள்ளம் தோண்டிப் புதைத்தான். ஒரு சிறுசமாதியை உருவாக்கினான். அப்போது அவ்வழியே வந்த ஒரு கூட்டம் இதைப் பார்த்து இறந்தது யார் என்று அவர்கள் வினவ கழுதை என்றால் அவர்கள் தன்னைக் கேலி செய்வார்கள் என்று அஞ்சி- சமயோசிதமாக இது என்னுடைய குருநாதர்.

அவர் பெரிய மகான் இது அவருடைய சமாதி. அதைத்தான் பூசை செய்ய வந்தேன் என்று கூற அந்த கூட்டமே அதை வீழ்ந்து வணங்கியது. காணிக்கைகளைத் தாராளமாக சமர்ப்பித்துவிட்டு சமாதிக்கு சமாதிக்கு காரணமான அந்த மனிதரையும் மறைந்த மகானின் பிரதம சீடனாக போற்றி வணங்கியது.

சமாதியில் குவிந்த காணிக்கையைக் கண்ட அம்மனிதனுக்கு பிழைக்கும் வழி மிகப் பிரகாசமாக விளங்கியது. நாளடைவில் நாளடைவில் அங்கு ஏராளமான மக்கள்வந்து வணங்கிச்செல்லலாயினர். அங்கு ஒரு பெரும்கோயில் எழுந்து அதைச் சுற்றி ஒரு சிறு நகரமே தோன்றி வளரலாயிற்று. அந்த மனிதன் கண்கண்ட கடவுளாக மதிக்கப்பட்டான்.

அந்த மனிதனுக்கு ஏராளமான சீடர்கள் வந்து சேர்ந்தனர். அம்மனிதன் சுகபோகத்தில் மிதந்தான்! அவன் சீடர்களின் முதலாவதாக வந்த சீடன் எப்படியோ அந்த சமாதி இரகசியத்தை அறிந்துகொண்டான். இதை வைத்து தன் ஆசானையே மிரட்டத்தொடங்கினான். இதனால் வெகுண்ட ஆசான் அவனை கோயிலிலிருந்து துரோகி பட்டம் சூட்டி வெளியேற்றினான்.

சிஷ்யன் மக்களிடம் சென்று உண்மையை கூறிப்பார்த்தான். உதைதான் பதிலாக் கிடைத்தது. இறுதியில் அவன் அந்த ஊரைவிட்டே விரட்டப்பட்டான்.



தாய்பாதத்தில் அன்னை சித்தர்

காலம் ஓடியது ஒரு மறை அந்த போலி குருகோயில் விவகாரமாக வெளியூர் பயணம் மேற்கொண்டான். வழியில் ஒரு திருக்கோயில் காணப்பட்டது.

ஒரு புதிய ஊரும் தோன்றியிருந்தது. இந்த பகுதி சில வருடங்களுக்கு முன்னால் ஜன நாடமாட்டடே இல்லாத அமைதி பிரதேசமாக இருந்தை அறிந்திருந்த அந்த குரு திடீர் கோயிலைக் கண்டு ஆச்சரியப்பட்டு கோயிருக்குள்ளே சென்றார். அங்கு அவரை வரவேற்றவர் வேறு யாருமில்லை. அந்த குருவால் விரட்டப்பட்ட அதே முன்னால் பிரதம சீடன் தான். அந்த கோயிலுக்கு எல்லாம் அவர்தன் என அறிந்த அந்த குரு- சீடனை தனியே அழைத்துச் சென்று எப்படி இதெல்லாம் வந்தது என்று இரகசியமாக கேட்க சாமி இது வேறொன்றுமில்லை உங்கள் கோயிலில் சமாதிகொண்ட அந்த கழுதை மகானின் குட்டியின் சமாதிதான் இது. எல்லாம் தாங்கள் காட்டிய வழிதான் என்றான். இதைக்கேட்ட அந்த குரு கற்சிலையாக உறைந்து போனார் என்று கதையை முடித்த ஆசான் என்ன ராஜா கதை எப்படி என்று கூறி மீண்டும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். இதுகண்ட எனக்கு சிரிக்கத் தோன்றவில்லை.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

---

# தமிழ் தனி ஈழ அரசு என்ற தீர்வுக்கு மாற்று...?

### இலங்கை ஒருமைப்பாட்டை வலியுறுத்துபவர்கள் யார்?

அந்த உரிமையின் தேவை, ஈழமக்களுக்கு இப்பொழுது உள்ளதா? சிங்களவர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையே 60 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் அரசியல் உறவுதான், அதற்கான பதிலைத் தெரிவிக்கிறது. அந்த அரசியல் உறவு என்னவாக இருக்கிறது? இவ்வளவு காலமும் இல





ங்கை அரசின் போர்க்குற்றம், மனித உரிமைகளுக்கெதிரான குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைக் குறித்து மட்டுமே பேசிவந்த மேற்கத்திய ஊடகங்களும் மனித உரிமை அமைப்புகளும் ஐ.நா.வின் துணை நிறுவனங்களும் தாங்கள் இதுவரை பேசாத ஓர் உண்மை குறித்து மெதுவாக பேசத் துவங்கியுள்ளன. அது கொல்லப்பட்ட ஈழ மக்களின் எண்ணிக்கை குறித்ததாகும். அது மிகவும் குறைவான மதிப்பீட்டின்படி கூட 1,50,000 ஈழ மக்கள் என்று தெரிவிக்கிறது. 100 சதவீதம் சிங்களவர்களை மட்டுமே கொண்ட படையினரால் ஈழ மக்கள் என்ற சிறுபான்மை தேசிய இனத்து மக்கள் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர் என்ற உண்மை, பன்னாட்டு விசாரணை ஒன்று நடத்தப்படவில்லை என்பதாலேயே இனப்படுகொலை அல்ல என்று ஆகிவிடாது. இவ்வாறு 60 ஆண்டுகால சிங்களவர்- தமிழர் அரசியல் உறவு என்பது சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகிடும் அளவிற்கு வந்துள்ளது.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சிங்கள- தமிழ் மக்களின் விகிதம் என்பது 65:30 ஆக இருந்துள்ளதை, அப்போதைய மக்கள் தொகை புள்ளிவிபர அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இப்பொழுது அதே இரு மக்களின் விகிதம் என்பது 80: 15 என்பதாக மாறிவிட்டது. கடந்த ஈழப்போர் மாத்திரமல்ல, இந்த புள்ளி விபரமும் இலங்கை- சிங்கள அரசின் தமிழின அழித்தொழிப்பைக் காட்டும் சான்றல்லவா?

செர்பிய இனம், போஸ்னியாவில் மேற்கொண்ட இனப்படுகொலை குற்றங்களை குறித்து பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டு குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை கிடைக்கப்பெறுவதற்கு பாடுபட்டுவரும் பாலஸ்தீன மக்களின் சட்ட ஆலோசகராகவும் ஒடுக்கப்படும் இனங்களின் உரிமைகளுக்கு போராடி வருபவருமான பன்னாட்டு சட்டவியல் அறிஞருமான வழக்குரைஞர் ஃபாயில், ஈழத்தமிழர்கள் மீது சிங்கள அரசு இனப்படுகொலை குற்றம் செய்துள்ளது என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார்.

ஒருநாட்டில் அதன் அரசு ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும் பெரிய தேசிய இனம், அந்நாட்டின் மற்றொரு சிறுதேசிய இனத்தாரை இனப்படுகொலை செய்யுமாயின், அவ்வாறு இனப்படுகொலைக்கு உள்ளாகும் இனத்திற்கு தக்க பாதுகாப்புத்தான் என்ன? அம்மக்களின் தனிநாட்டு உரிமையை அங்கீகரித்து, அவர்களுக்கு தனி அரசு அமைத்துக் கொடுப்பதுதான், பன்னாட்டு சமூகம் அளிக்கும் பாதுகாப்பாக இருக்க முடியும் என்று ஃபாயில் தெரிவிக்கிறார். அந்த தீர்வு, ஈழத்திற்கு மிகவும் உடனடியானதும் அவசியமானதும் என்றும் கூறுகிறார்.

### இங்கு ஈழ மக்களின் வாழ்வா? அல்லது அழிவா? என்பதுதான் கேள்வி

எனவேதான், ஈழ மக்களின் வாழ்வை ஆதரிக்கும் குரல்கள், அவர்களின் தனி ஈழ அரசு என்ற கோரிக்கையையே ஆதரிக்க முடியும். ஆதரிக்கவேண்டும். அவர்களின் அழிவை ஆதரிக்கும் குரல்கள்தான், இலங்கையின் ஒருமைப்பாட்டை ஆதரித்தன. ஆதரிக்கின்றன. ஆதரிக்கப்போகின்றன.

### ஈழப்போராட்டம்- தமிழகத்தின் தொடர்பும் பங்களிப்பும்

இந்திய அரசு, என்னதான் இராணுவ பொருளாதார வலிமைகள் கொண்டிருந்த போதிலும் அவற்றினை மட்டுமே கொண்டு இலங்கை நாட்டின் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி அந்த அரசினை தனது போக்கிற்கு செயற்படுமாறு செய்துவிடு முடியாது. அந்நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு, அவற்றிற்கும் மேலாக ஒரு காரணி அதற்கு உதவி வருகிறது. அது 8 கோடி தமிழர்களை கொண்டுள்ள நாடு என்ற முறையில் தமிழ்நாட்டு தமிழர்களின் பிரதிநித என்று பன்னாட்டு அரங்கில் செயற்பட முடிவதுதான். இந்தக் காரணம் இல்லாவிடில் இலங்கை அரசும் கூட இந்தியாவிற்கு பணிய வேண்டிய தேவையில்லை. ஆக, இந்திய அரசு ஈழமக்களுக்கு செய்துள்ள அனைத்து கேடுகளும் தமிழ்நாட்டு தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு செயற்படுவதில்தான் உள்ளது.

தொடரும்

ஆய்வாளர் சு. அருணாச்சலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி மருதோடை கிராமம் கவனிப்பாரின்றி



(பூந்தோட்டம்)

**வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள மருதோடை கிராமம் அடிப்படை வசதிகளின்றி காணப் படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.**

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்களாகியும் ஒருசில குடும் பங்களுக்கு மட்டுமே வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது. பல குடும்பங் கள் தற்போதும் தற்காலிக குடிசை களில் வாழ்வதாகவும் அக் குடிசை கள் மழை காலத்தில் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற வகையில் இருப் பதில்லை எனவும் தெரிவிக்கும் அவர்கள், தம் அனைவருக்கும் வீட் டுத்திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரி க்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, தமது கிராம த்தை சூழ காடுகள் உள்ளமை யால் காட்டு யானைகள் மாலை 4 மணிக்கே கிராமத்திற்குள் வந்து விடுவதாகவும் இதன் காரணமாக மக்கள் நடமாட முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கும் அவர்கள், இரவு நேரத்தில் மின் சாரமின்மையால் யானைகளை அடையாளம் காணமுடியாதுள்ள தாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இக்கிராமத்தில் உள்ள வீதிகள் செப்பனிடப்படாமையினால் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பேருந்து களும் மழை காலத்தில் தமது சேவைகளை இடைநிறுத்துவதால் பாடசாலை மாணவர்கள், வைத்திய சாலை செல்வோர் என பலரும் அன்றாடம் பல சிக்கல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவிக் கின்றனர்.

போதுமான மருத்துவ வசதி கள் இல்லாததுடன் அயல் கிராமத் தில் உள்ள கிராமிய மருத்துவ நிலையத்திற்கு செல்ல வேண்டியு ள்ள போதிலும் அங்கு வாகன வசதிகள் இல்லாமையினால் இரவு நேரங்களிலும் பகல் நேரங் களிலும் அவசர நோயாளர்களை நெடுங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் தாம் சிரமங் களை எதிர்கொள்வதாகவும் தெரி விக்கின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் தமது கிராமம் தொடர்பில் கவன மெடுத்து தமது சீரான வாழ்க்கை க்கு வழியமைத்து தருமாறு கோரி க்கை விடுக்கின்றனர். (ம-266)




## வரிப்பணத்தை செலுத்தினால் மானிய விலையில் உரம்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை பிரிவில் இவ்வாண்டு காலபோக பயிர்ச் செய் கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் காலபோக ஏக்கர் வரிப்பணத்தை பூநகரி கமநல சேவை நிலையத் தில் செலுத்துமாறு அறிவிக்கப்பட் டுள்ளது.

இக்கால போகத்திற்குரிய ஏக்கர் வரிப்பணத்தை செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலமே மானிய விலையில் உர வகை களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு பூநகரி கமநல சேவை பிரிவில் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நெற்காணிகளில் காலபோக பயிர்ச் செய்கை நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-84)


## வாகனத்தை களவாடிய நபருக்கு கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

வாகன செசி என்ற இலக்க த்தை மாற்றி தனது வாகனம் என கூறி களவாடிச் சென்ற நபர் ஒரு வருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா உத்தரவிட் டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியில் 28.08.2011 அன்று கைவிடப்பட்ட வாகனத்தை தவறான முறையில் களவாடியதாக பொலிஸார் எதிரி க்கு எதிராக குற்றஞ்சாட்டியிருந்த னர். (ம)

## புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் அசௌகரியம்



(பூந்தோட்டம்)

வவுனியா சிதம்பரபுரம் வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி யில் வாழும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோவில்குளம் சந்தியில் இரு ந்து சிதம்பரபுரம், கோமரசன்குளம், கேசுபுரம், ஆச்சிபுரம், கற்குளம், கல்நாட்டினகுளம், சமளங்குளம், முருகனூர், எல்லப்பர் மருதங் குளம் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் சுமார் 15 கிலோமீற்றர் தூரமான இப் பிரதான வீதி கடந்த பல வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சமளங்குளம் அ.த.க. பாடசாலை, முருகனூர் சரஸ்வதி வித்தியாலயம், கோமரசன்குளம் மகாவித்தியால யம், சிதம்பரபுரம் நடராஜர் வித்தி யாலயம், கல்நாட்டினகுளம் அ.த.க. பாடசாலை போன்றவற்றுக்கு செல் லும் இவ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது.

இவ்வீதியை தினமும் பல நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவதாக வும் மழை காலங்களில் சேறும் சகதியுமாக காணப்படுவதால் பெரும் சிரமங்களை அவர்கள் எதிர்கொள்வதாகவும் தெரிவிக் கின்றனர்.

இதேவேளை, பல ஆண்டுக ளாக திருத்தப்படாத இவ் வீதி தொட ர்பில் தாம் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தும் எவ்வித நடவ டிக்கையும் எடுக்கப்படாத நிலை யில் இக் கிராமங்களுக்கு செல்லும் உள்ளக வீதிகளும் சேதமடைந் துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின் றனர்.

இதேவேளை, இவ் வீதி பேருந் துகளின் பிரதான போக்குவரத்து மார்க்கமாகவுள்ளதால் பேருந்து கள் முதல் அனைத்து வாகனங்க ளும் விரைவில் பழுதடைவதாக வும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வீதியை மழை காலத்திற்கு முன்னர் புனரமைத்து பொது மக்களின் சீரான பய ணத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (ம-266)

## மகிழங்குளத்தை புனரமைப்பதில் அதிகாரிகளுக்கு அக்கறையில்லை

### விவசாயிகள் கவலை

(பூந்தோட்டம்)

வவுனியா கோவில்குளம் கமநல சேவையின் கீழ் அமைந்துள்ள பத் தினியார் மகிழங்குளம் குளக்கட்டு உடையும் நிலையில் காணப்படுவ தாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக் கின்றனர். இது தொடர்பில் விவசா யிகள் தெரிவிக்கையில்,

தாண்டிக்குளம் கமக்காரர் அமைப்பின் கீழ் சுமார் 150 ஏக்கர் வயல் காணிகளைக் கொண்டு அமைந்துள்ள பத்தினியார் மகிழங் குளம் கடந்த வருடம் பெய்த கடும் மழையின் காரணமாக உடைப் பெடுக்கும் அபாயம் காணப்பட்ட நிலையில் இராணுவத்தினரும் விவசாயிகளும் இணைந்து மண் மூடைகளை இட்டு குளத்துநீர் வெளியேறுவதை தடுத்தனர்.

எனினும் அதன் பின்னர் கம நல சேவையினர் இக் குளத்தை திருத்தம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமை யால் மீண்டும் மழைகாலம் நெரு ங்கும்போது குளம் உடைப்பெடுக் கும் அபாயம் காணப்படுகின்றது.

இவ்விடயமாக தாம் பல தட வைகள் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் அவர் கள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காதுள்ளனர்.

எதிர்வரும் காலபோகத்தில் விவசாயிகளாகிய தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரி டும் எனவும் தாம் இக்குளத்தை நம்பி காலபோக செய்கையில் ஈடு பட முடியாதுள்ளதாகவும் தெரிவித் தனர். (அ-266)

## அரச சட்டவாதிகளுக்கு நிரந்தர நியமனம்

(பூந்தோட்டம்)

யாழ்ப்பாணம் மற்றும் வவு னியா மேல் நீதிமன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு அரச சட்டத்தரணிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள் ளன.

சட்டமா அதிபர் திணைக்களத் தில் வைத்து சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோவினால் வழங் கப்பட்ட இந் நியமனங்களை யாழ் ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் அரச சட்டத்தரணியாக பணியாற் றும் நளினி கந்தசாமியும் வவு னியா மேல் நீதிமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அரச சட்டத் தரணி நிசாந் நாகரட்ணமும் பெற் றுக் கொண்டுள்ளனர். (அ-266)

## வகுப்பறைக்கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது




புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பி ரமணிய வித்தியசாலை க்கு சிறுவர் நிதிய கொரிய நிறுவனத்தினால் 3.2 மில் லியன் ரூபா செலவில் மூன்று வகுப்பறைக் கட் டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதற் கான அடிக்கல்லை முல் லைத்தீவு வலயக் கல் விப் பணிப்பாளர் ம.ராஜ குமார் நாட்டி வைத்தார். அத்துடன் இலத்திரனியல் நூலகமும் மூன்று இலட்சத்து 88 ஆயிரம் ரூபா செலவில் திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்கு நிழல் தரும் 10 மரக்கன்றுகளும் நாட்டப்பட்டது. இந்நிகழ்வுக்கு அவ் வித்தியாலய அதிபர் இ.செல்வநாயகம் தலைமை தாங்கியதுடன் இதில் இலங்கைக்கான சிறுவர் நிதியத்தின் பணிப்பாளர் எலிநோர், சிறுவர் நிதியத்தின் வடபகுதியின் பிராந்திய முகாமையாளர் ச.மதிவண்ணன் ஆகியோர் கலந்து சிறப் பித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடைபெறும் பிரதேசங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்

## கபே அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

**தேர்தல் நடைபெறும் பிரதேசங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென கபே அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. தேர்தல் நடைபெறும் மூன்று மாகாணங்களிலும் அதிகளவு வன்முறைகள் இடம்பெறும் பிரதேசங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென பவ்ரல் அமைப்பு பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் குழப்ப நிலைமைகள் நீடித்து வருவதாகவும் ஆயுதங்களைப் பயன்படுத்தி அச்சுறுத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் அவர்களது தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டும். அரசியல் அழுத்தங்களுக்கு பொலிஸார் அடிபணியக் கூடாது. தேர்தல் சட்டங்களை பாதுகாக்கக் கூடிய வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கபே தெரிவித்துள்ளது.

இதேவேளை, அண்மையில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து, பிரதேசத்தின் பல இடங்களில் சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தாக்குதல், அச்சுறுத்தல், வாகனங்களைச் சேதப்படுத்தல், காரியாலயங்களை சேதப்படுத்தல் என பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் தரப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கபே கோரியுள்ளது.

சில தரப்பினர் ஆயுதங்களுடன் பேரணிகளில் கலந்து கொள்வதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கலகங்களைத் தடுக்கக் கூடிய வகையில் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கலகங்களைத் தடுக்கவும் குற்றச் செயல்களைத் தடுக்கவும் அரசாங்கம் பொலிஸ் கட்டளைச் சட்டத்தை திருத்தி அமைக்கவுள்ளது.

148 ஆண்டுகள் பழைமையான பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் மாற்றம் செய்ய பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

சட்ட திருத்தம் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களும் கோரப்பட்டுள்ளன. சட்ட திருத்தத்தை மேற்கொள்ள ஆறு பேரைக் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)




காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் கருவி மாற்றுத் திறனானிகளின் சமூகவள நிறுவனம் நடத்திய அரங்கம் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாற்றுத் திறனாளிகள் பட்டிமன்ற நிகழ்வை நடத்துவதையும் பட்டிமன்ற குழுவிற்கு பரோபகாரி க.பாலையா எண்பதாயிரம் ரூபாவை ஆலயம் சார்பாக வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

## பின்னல் ஓவியங்களின் கண்காட்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கலைவட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில், ஒஸ்ரிய பெண் கலைஞரான அனா ஹோல்மனின் பின்னல் எனும் ஓவியங்களின் காட்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை வரை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். பல்கலைக்கழக புதிய கலைப் பீட கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளதாக கலைவட்ட நுண்கலைத்துறை தலைவர் அறிவித்துள்ளார்.

இக்கண்காட்சியில் ஓவியர்கள், பாடசாலையில் சித்திரம் கற்கும் மாணவர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# காப்பெற் வீதியில் தேர்தல் சின்னங்களை வரைந்த வேட்பாளர் மீது நடவடிக்கை

## பொறுப்பதிகாரி சமன்சிகேர தெரிவிப்பு

யாழ்.நகரிலுள்ள பொலிஸ் பிரிவிற்கு முன்பாகவுள்ள காப்பெற் வீதியில் தேர்தல் சின்னங்களை வர்ணம் தீட்டிய வேட்பாளர் மீது யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேர தெரிவித்தார்.

இவ்வாறு பொலிஸ் பிரிவிற்கு முன்பாக வர்ணம் தீட்டப்பட்டுள்ள தேர்தல் சின்னங்களை அழிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.நகர் உட்பட பல்வேறு இடங்களிலும் பொலிஸாரின் நடமாட்டம் இல்லாத சமயம் பார்த்து வீதிகளில் அனைத்து கட்சியினரும் தேர்தல் சின்னங்களை வர்ணம் தீட்டிவருகின்றனர்.

எனினும் 24 மணிநேர கடமை புரியும் பொலிஸார் உள்ள யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பொலிஸ் பிரிவிற்கு முன்பாக கூட ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவருடைய தேர்தல் சின்னம் பொறிக்கப்பட்டது எவ்வாறு? என ஊடகவியலாளர்களால் கேள்வி யெழுப்பப்பட்டபோது, அதற்கு பதிலளித்த பொறுப்பதிகாரி, அவ் வேட்பாளருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதோடு, வீதியில் வரையப்பட்டுள்ள தேர்தல் சின்னங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, ஏனைய இடங்களில் வரையப்பட்டுள்ள தேர்தல் சின்னங்கள் தொடர்பில் வினவிய போது, பதிலளித்த காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எம். பத்திநாயக்க,

இது தொடர்பில் தேர்தல் திணைக்களத்திடம் நாம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளோம்.

அதன்படி வேட்பாளர்கள் தமது பணியாட்கள் மூலம் சின்னங்களை அழிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனரென தெரிவித்த அத்தியட்சகர், எத்தனையோ சிரமங்களின் மத்தியில் அமைக்கப்பட்ட வீதிகளை தமது பிரசாரங்களிற்காக நாசப்படுத்த வேண்டாம் எனவும் வேட்பாளர்களைக் கேட்டுக் கொண்டார். (அ-4)

# வவு.சமுர்த்தி அலுவலகத்தினால் மக்களுக்கு பல்வேறு உதவிகள்

வவுனியா பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தினால் பல்வேறு உதவித் திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச புகைத்தல் மது ஒழிப்பு தினத்தில், சமுர்த்தி உத்தியோகத்தர்களால் சேகரிப்பட்ட நிதியில் இருந்து பாடசாலை மாணவர்கள் 100 பேரின் கல்வி வளர்ச்சிக்காக தலா 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டதுடன் சிப்தொர புலமைப் பரிசில் திட்டத்தினூடாக 32 பேருக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப் பட்டிருந்தன.

இதேவேளை, சமுர்த்தி பயனாளிகள் 12 பேருக்கு வீடு புனரமைப்புக்காக தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதுடன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானோருக்கும் 40 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டிருந்தது.

சமுர்த்தி பயனாளிகள் 11 பேருக்கு மருத்துவ வசதிகளுக்காக தலா 20 ஆயிரம் ரூபா வீத நிதி வழங்கப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலக சமுர்த்தி சமூக மன்றம் ஏற்பாடு செய்திருந்த இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, வவுனியா பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தின் தலைமைப் பீட முகாமையாளர் சர்வலோஜினி சந்திரகுமார், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ-266)

# தெற்காசிய வலய வர்த்தக தலைமை பொறுப்பு அமைச்சர் றிசாத்திடம்

தெற்காசிய நாடுகளின் வர்த்தக அமைச்சர்களின் தலைமைப் பொறுப்பு அமைச்சர் றிசாத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளின் வர்த்தக அமைச்சர்களின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் இடம் பெற்றது. இதன்போது 2013- 2014 ஆம் ஆண்டிற்கான தலைமைப் பதவி இலங்கையின் வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான நாடுகளின் மாநாடு கொழும்பில் ஆரம்பமானது. இதில் இலங்கை, இந்தியா, பூட்டான், நேபாளம், மாலைதீவு, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் பங்கேற்றனர்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையின் வர்த்தக கைத்தொழில் அமைச்சராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார். இலங்கை பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கும் அமைச்சாக கைத்தொழில் வணிகத்துறை அமைச்சு விளங்குகின்றது.

தெற்காசிய வர்த்தக அமைச்சர்களின் வரிசையில் இலங்கைக்கு அதனது தலைமைத்துவம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் எதிர்கால இலங்கையின் வர்த்தக மேம்பாடுகளுக்கு இது பலமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிழலுக்குப் பணம்



சில நாட்கள் சென்றன. சீடர்களை அழைத்தார் குரு.

"மடத்தின் செலவிற்குப் பணம் இல்லை. வெளியூர் சென்றால்தானே மடத்திற்கு வருவாய் வரும். நல்லூருக்குச் செல்ல எண்ணியுள்ளேன். பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என்றார் அவர்.

"குருவே! அப்படியே செய்கிறோம்" என்ற சீடர்கள் வெளியே வந்தார்கள்.

என்ன செய்வது என்பது குறித்துப் பேசத் தொடங்கினார்கள்.

"நம் குருவோ முதியவர். நல்லூரோ தொலைவிலுள்ளது. அவ்வளவு தொலைவு அவரை நடத்தி அழைத்துச் செல்லக்கூடாது. என்ன செய்யலாம்?" என்று கேட்டான் மிலேச்சன்.

"குதிரை ஒன்றை வாடகைக்கு அமர்த்துவோம். அதில் குருவை அமரச் செய்துஅழைத்துச் செல்வோம்" என்றான் மடையன்.

குதிரைக்காரன் ஒருவனிடம் அவர்கள் சென்றார்கள். குதிரைக்கு ஒருநாளைக்கு ஐந்து காசு வாடகை என்று பேசி முடித்தார்கள்.

காலை நேரம் குதிரையில் அமர்ந்தார் குரு.

சீடர்கள் சூழ்ந்து வரப் புறப்பட்டார்.

குதிரைக்காரனும் அவர்களுடன் சென்றான்.

நேரமாக ஆகக் கடுமையான வெயில் அடிக்கத் தொடங்கியது. குருவால் வெயிலைத் தாங்க முடியவில்லை.

அப்படியே குதிரையில் மீது மயங்கி விழுந்தார்.

இதைப் பார்த்த சீடர்கள் "ஐயோ! குருவே!" என்று அலறினார்கள்.

"குருவை நாம் நிழலில் படுக்க வைக்க வேண்டும். பக்கத்தில் மரம் ஏதும் இல்லையே. என்ன செய்வது?" என்று கேட்டான் மட்டி.

குதிரையின் நிழல் அவர்களுக்குத் தெரிந்தது. அந்த நிழலில் போர்வையை விரித்தார்கள்.



குருவை அதில் படுக்க வைத்தார்கள்.

அழுது புலம்பியபடி அவரைச் சூழ்ந்து நின்றார்கள் சீடர்கள். அவருக்குக் காற்று வருமாறு விசிறியால் விசிறினார்கள்.

சிறிது நேரத்தில் கண் விழித்தார் குரு.

சீடர்கள் கண்ணீர் வழியத் தன்னைச் சூழ்ந்து நிற்பதைப் பார்த்தார்.

அவர்கள் அன்பைக் கண்டு நெகிழ்ந்தார்.

மெல்ல எழுந்த அவர் "சீடர்களே! என் மயக்கம் தெளிந்துவிட்டது. வெயிலும் குறைந்துவிட்டது. நாம் புறப்படலாம்" என்றார்.

சீடர்கள் குதிரையின் மேல் குருவை அமர வைத்தார்கள்.

பயணம் தொடர்ந்தது. மாலை நேரத்தில் நல்லூரின் எல்லையை அடைந்தார்கள்.

ஊருக்குள் சென்ற மூடன் ஊர்த் தலைவரைச் சந்தித்தான். பரமார்த்தகுரு அவர்கள் சீடர்களுடன் ஊரின் எல்லையில் தங்கி இருக்கிறார் என்றான்.

இதைக் கேட்ட தலைவர் ஊர் மக்களை அழைத்தார். அவர்களுடன் கூட்டமாகச் சென்று பரமார்த்தகுருவைச் சிறப்பாக வரவேற்றார்.

ஊருக்குள் நுழைந்தார் குரு.

சீடர்களும் மக்களும் "பரமார்த்தகுரு வாழ்க" என்று முழக்கம் செய்தார்கள்.

ஊர்த் தலைவர் அங்கு வந்தார் "குருவே! நீங்களும் சீடர்களும் என் இல்லத்தில் விருந்து உண்ண வேண்டும்" என்று வேண்டினார்

அவர் வீட்டில் குருவும் சீடர்களும் வயிராற உண்டார்கள். தங்கியிருந்த மடத்திற்குப்புறப்பட்டார்கள்.

"நம் குருவிற்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்தாயா? அவர் புகழ் எங்கும் பரவி உள்ளது" என்றான் மடையன்.

"விருந்து எவ்வளவு அருமை! இப்படிப்பட்ட சுவையான உணவை நான் உண்டதே இல்லை" என்றான் பேதை.

இப்படி பேசிக்கொண்டே எல்லோரும் மடத்தை அடைந்தார்கள்.

அங்கே குதிரைக்காரன் அவர்களுக்காகக் காத்திருந்தான். குருவைப் பார்த்ததும் வணங்கினான்.

"மடையா! இன்றைய கூலியை இவனுக்குக் கொடுத்து அனுப்பி விடு" என்றார் அவர்.

அவனிடம் ஐந்து காசுகளைத் தந்தான் மடையன்.

அதை எண்ணிப் பார்த்தான்.

அவன் "என்ன ஐந்து காசு. தான் தருகிறீர்கள்?" என்று கூச்சல் போட்டனான்.

அவன் கூச்சலைக் கேட்ட ஊர்த் தலைவர் அங்கு வந்தார்.

தகராறு எதற்கு என்று நினைத்தார் குரு "உனக்கு எவ்வளவு கூலி தரவேண்டும்?" என்று கேட்டார்.

"எட்டுக் காசுகள் தர வேண்டும்" என்றான் அவன்.

குறுக்கிட்ட மடையன் "ஒரு நாளைக்கு ஐந்து காசு கூலி பேசினேன். நீயும் ஒப்புக்கொண்டு குதிரையுடன் வந்தாய். இப்பொழுது எட்டுக் காசு கேட்டுக் கூச்சல் போடுகிறாயே" என்று பதிலுக்குக் கத்தினான்.

அங்கிருந்த ஊர் தலைவர் "நீ பேசியது போல ஐந்து

## பரமார்த்த குரு கதைகள்

காசை வாங்கிக் கொள்" என்றார்.

"ஐயா! ஐந்து காசு கூலி பேசியது உண்மைதான். அதன்படியே குதிரையை ஓட்டிக்கொண்டு இவர்



களுடன் வந்தேன்.

இவர்கள் கடுமையான வெயிலில் என் குதிரையை நிறுத்தினார்கள். அதன் நிழலில் குரு ஓய்வு எடுத்துக்கொண்டார். நான் சொல்வது உண்மையா என்று கேளுங்கள்" என்றான் அவன்.

"குதிரையின் நிழலில் ஓய்வு எடுத்தது உண்மைதான்" என்றார் குரு.

"சரி! அதற்காகக் கூலியை உயர்த்திக் கேட்கலாமா" என்றார் ஊர்த் தலைவர்.

"ஐயா! இந்தக் குதிரையை என் உயிரினும் மேலாகப் பாதுகாத்து வருகிறேன். கடுமையான வெயிலில் நின்று இது இவருக்கு நிழல் தந்தது. நிழலுக்காக நான் கேட்கும் மூன்று காசு குறைவுதான்" என்றான் அவன்.

ஊர் மக்கள் அங்கே கூடிவிட்டார்கள்.

"குதிரையின் நிழலுக்கு மூன்று காசு கூலியா? என்று புலம்பினார்" குரு.

கூட்டத்தில் சிலர் குதிரைக்காரன் சொல்வதுதான் சரி என்றார்கள். மற்றும் சிலர் குருவும் சீடர்களும் சொல்லதே சரி என்றார்கள்.

இதனால் அங்கே கூச்சலும் குழப்பமும் நிலவியது.

எல்லோரையும் அமைதிப் படுத்தினார் ஊர்த் தலைவர். "நான் என்ன தீர்ப்பு வழங்கினாலும் ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்டார்.

குருவும் குதிரைக்காரனும் "ஏற்றுக்கொள்வோம்" என்றார்கள்.

ஊர்த் தலைவர் பேசத் தொடங்கினார்.

"உண்மையில் நடந்த நிகழ்சசி இது. அப்பொழுது நான் இளைஞனாக இருந்தேன்.

வெளியூருக்குக் கட்டுச்சோற்று மூட்டையுடன் புறப்பட்டேன்.

வழியில் இருந்த சத்திரத்தில் இரவு தங்கினேன். கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்தேன். நண்பகலில் சாப்பிட்ட அதே புளிச்சோறு தான் இருந்தது.


இதையா சாப்பிடுவது என்று வெறுப்புடன் பார்த்தேன்".

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## என் கனவு நகரம்



அழகான ஒரு நகரம்
அதில் அன்பு மிக்க மக்கள்
அங்கு ஜாதி என்பது
ஆண் ஜாதி பெண் ஜாதி
என்ற இரண்டுமே
போட்டி இல்லை பொறாமை இல்லை
எல்லோரும் சமம் என
நினைக்கும் மக்கள்
ஏழை பணக்கார பேதம் இல்லை
கொள்ளையிடும் மக்கள் இல்லை
கடத்தல்காரர்கள் இல்லை
கற்பழிப்பவர்கள் இல்லை
சீதனக் கொடுமை இல்லை
எல்லோர் மனதிலும்
சந்தோசக் கோலம்
அந்த நகரத்திலே நானும் ஒரு
பட்டாம்பூச்சி போல்
சிறகடிக்கும் பறவை
சந்தோச உற்சாகத்தில்
சத்தமிட்டு சிரித்தேன்
அன்பு தோழி அவள்
என்னை தட்டி எழுப்பினாள்
கண்விழித்து
பார்த்தேன் கண்டது வெறும் கனவே

*எஸ்.விஜிதபாமா*
*கோண்டாவில்*

## மொட்டுக்களின் தீக்குளிப்பு

வார்த்தைகளுக்கு மட்டுமல்ல– அவர்கள்
வதனங்களுக்கும் அர்த்தம் உண்டு
என்பதை வர்ணிக்கின்றார்கள்
வாலிப வயதில் அவர்களுடைய
திருமணப் பேச்சு ஆரம்பமாகின்றது
வரதட்சணை என்ற வார்த்தை
வனிதையர் வாழ்வை...
வளப்படுத்தமுடியாமல்– மீண்டும்
அடுப்படிக்கு அனுப்பப்படுகின்றார்கள்
ஒவ்வொரு திருமணப் பேச்சும்
ஒவ்வொரு சோகச் செய்தியை
சுமந்து வருகின்றது...
ஆச்சரியமான குற்றச்சாட்டுக்கள்
இன்னும் என்னன்னவோ...
தினம் தினம் வாடுவது
மலர் மொட்டுக்களல்ல
இளஞ்சிட்டுக்களும்கூட....
வாலிபத்தின் வலியினால்...
சில தேவதைகள்...
தீக்குளித்துக்கொண்டிருக்கிறார்கள்

*பா.மதனபாரதி, அல்வாய்*

## நட்பு

அழகு இருந்தால்
வருவேன் என்றது
காதல்
பணம் இருந்தால்
வருவேன் என்றது
சொந்தம்
எதுவும் வேண்டாம்
இறந்தாலும்
வருவேன் என்றது
நட்பு


ச.புவித்ரா. சாவகச்சேரி

## வெற்றிகளை உருவாக்கிடு

எத்தனை முறை காயப்பட்டாலும்
எதிர்நீச்சல் போட கற்றிடு
அத்தனை நினைவுகளையும்
அடியோடு களைந்திட முயன்றிடு
நினைப்பதெல்லாம் கிடைப்பதில்லை
கிடைத்ததுகூட நிலைப்பதில்லை
உண்மைகள் தினம் அறிந்திடு
ஊமையாய் அழுவதை நிறுத்திடும்
அழும்போது அரவணைத்தும்
விழும்போது தூக்கிவிட்டும்
தோள் கொடுக்கும் தோழமையை
எப்போதும் அன்புடன் நேசித்திடு
தோல்விகள் தோற்றிடு
வெற்றிகளை உருவாக்கிடு
வீணான பிரச்சினைகளில்
எட்டவாய் விலகி இருந்திடு
துன்பங்கள் தூர பறந்திடும்
துயரங்களும் ஓடி ஒழிந்திடும்
இன்பங்கள் நிறைந்திடும்
எங்கும் புன்னகை பூத்திடும்

*ஆஷா, யாழ்ப்பாணம்*

## தம்பியுடையான்...



மாவை.நா.கஜேந்திரன்

தம்பி எழுந்தான்
கையில் பற்பொடியை
கொட்டி எடுத்துக்கொண்டு
திண்ணையில் அமர்ந்தான்
தந்தை புறப்பட்டார். வேலைக்கு
தங்கை விடை பெற்றாள் பள்ளிக்கு
தாயவளோ நெருப்பை
வயிற்றில் கட்டியபடி...
தனையனோ எதுவுமறியாமல்
துலக்குகிறான் பல்லை
தன்வாழ்வு விளங்காமல் போவதறியாமல்



கவிதைக் கலசம்

# மௌனத்தின் தேடல் – 168



## உரிமையும் கடமையும்

ஒற்றுமையென்னும்
ஒப்பற்ற பண்புஓங்கி வளர்ந்தால்
பதுங்கிப் பாயும் சிங்கத்தையும்
ஒதுங்கிப்போக வைக்குமென்ற
ஐந்தாமறிவின் இச்செய்கையானது
ஐயத்திலலையும் ஆறாமறிவை
ஆற்றுப்படுத்தும் ஆற்றலுடையது

அரு.கனகராசா

## காடாய்ப் போச்சு நாடு

காடாய்ப் போச்சு நாடு!
கவலைகளோ தினம் நூறு!!
உழைத்து வாழலாம் என்றாலோ
அணை இல்லா வீட்டினுள்
நுழையும் வெள்ளம்போல்...
கொடிய மிருகங்களின் வாலாட்டம்
நடுத்தெருவில் அநாதைகள் போல்...
பயப்பிராந்தியோடு வாழும் இழிநிலை
எத்தனை காலம்தான்
தொடரப்போகுதோ யார் அறிவார்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## நிச்சயம் வெல்வோம்

சிங்கமே நீ நடந்து கொள்ளும்
அசிங்கமான செயல் கண்டு
தாங்கமுடியாது
பொங்கி எழுந்து போராடத்
துணிந்து விட்டோம், ஓடாதே
எங்கு நீ ஓடி ஒழிந்தாலும்
அங்கெல்லாம் வந்து தாக்குவோம்
எங்கள் பொறுமைக்கும் எல்லையுண்டு

துரை தென்மட்டுவில்

## நிற மாந்தர்

கானகத்து நடுவில்
காட்டெருமைகள்
கதி கலங்கிட
சிங்கமொன்று
சினங்கொண்டு
தாவிப் பாய்ந்தது
அவ்வழியே
நம் நாட்டிடை
மாந்தருள்
வலியோர் நலிந்தோர்
எனும் வகையுளத நீவிர்
அன்று முதல் இன்று வரை

க.ஞானசிலன்
கொற்றாவத்தை

## காலம் வருகுது

வலியதுதான் உயிர் பிழைக்கும்
என்ற காலம் போய்
கூடிச் செயற்பட்டால்
எவ் வலியதும் ஒரு கால்தூசுதான்
முடியாது என்றல்ல
காலம் முடிவு செய்யும்

க.கபில்ஸ்ரன்

## துணிந்திடு

துணிந்து நின்றால்
எந்தத் துன்பமும்
எம் காலடியில்
என்பதற்கு இவை
ஓர் எடுத்துக்காட்டு

திருமதி ரூபி விமலதாஸ்
நவாலி

## ஒற்றுமையா?

காட்டுக் குகைக்குள் கர்ச்சித்திருந்த
சிங்கம்தனை இன்று ஏன்
எருமைகள் விரட்டுகின்றன?
விரட்டுகின்றனவா? இல்லை
இணைந்து [illegible]
ஒற்றுமையை [illegible]

ரி.விஜிதா
மயிலிட்டி

## நாமும்தான்

ஒற்றுமையை குலைத்து
வேற்றுமையை உருவாக்கி
வெற்றி கண்ட சிங்கம்
புற்றுக்குள் பாம்பைவிட
சோற்றுக்குள் விஷத்தைவிட
தொற்றுநோயின் துயரைவிட
ஆற்றாமையை உருவாக்கி
முற்றும் அழிவு தரும் என
கற்றும் உணராததன் பயன்
நாமும் தோற்றுப் போனவர்களாய்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## விதி இதுவே

காட்டு ராஜாவே
எருமை மாடுகள்
உன்னைத் துரத்தும்
விதி இதுவே

சி.றெபேக்கா
மட்டுவில்

## வாழ்வோம்

இவ்வுலகில் பிறந்த
அனைத்து ஜீவன்களுக்கும்
அன்பு காட்டுவோம்
கருணை செய்வோம்
பாசத்துடன் பழகுவோம்
நேயத்துடன் வாழ்வோம்
இவ்வுலகில் நிம்மதியாக

ஆ.கயல்விழி
மட்டுவில்

## மாற்றம்

துரத்த துரத்த
தனித்தனியே ஓடியவை
கூட்டமாய்
துரத்தப் பழகிவிட்டன
காட்டு ராஜாங்கம்
மாறப்போகுது போல

இணுவில்
வாகீசன்

## அராஜகம் ஒழியட்டும்

காட்டுக்கும் நாட்டுக்கும் ராஜா
நானே என்று காட்டுமிராண்டித்தனமாய்
ஆட்சிசெய்யும் அரக்க குணம் கொண்ட
சிங்கராஜாவே
காளைமாட்டை கட்டவிழ்த்துவிட்டு
வேடிக்கை பார்க்க எண்ணினாய்
மாறாக உன் கோழைத்தனத்தையும்
பலவீனத்தையும் அல்லவா...?
காட்டி விட்டு ஓடிப்போகிறாய்!


எஸ்.பாஸ்கரன்
சண்டிலிப்பாய் வடக்கு

## ஒற்றுமையே பலம்

பாய்ந்துவரும் பயங்கரத்தினை
பயந்து ஓடி விரட்டிடவே
ஒய்ந்து இருந்து கூடி
ஒருமித்து திட்டம் தீட்டி
துயர்தனை துடைத்திட
துணிவுடன் வந்து
பயம்தனைப் போக்கி
ஒற்றுமையே வெல்லுமென
பகர்ந்து காட்டினீரோ!

பொ.புனிதன்
வரியப்புலம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –169



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 29.08.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் அனல்மின் திட்டத்தை தாமதமின்றி ஆரம்பிக்குக

## இந்தியாவிடம் இலங்கை வலியுறுத்து

(கொழும்பு)

**சம்பூரில் அனல்மின் திட்ட கட்டுமானப் பணிகளைத் தாமதமின்றி ஆரம்பிக்குமாறு இந்தியாவிடம் இலங்கை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக இலங்கை மின்சக்தி அமைச்சின் செயலர் எம்.எம்.சி. பெர்னாண்டோ இந்திய அரசாங்கத்துக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.**

அதில் சம்பூரில் 500 மெகாவோட் திறனுள்ள அனல்மின் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக நிலவும் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு தேசிய அனல்மின் கழக அதிகாரிகளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த மின் திட்டம் தொடர்பாக நிலவுகின்ற முரண்பாடுகளைத் தீர்ப்பது குறித்தும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களுடன் ஆராயவுள்ளது.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் அனல்மின் நிலையத்தை செயற்பட வைக்கும் நோக்கில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மின்சார சபை பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். 2015 ஆம் ஆண்டில் செயற்படத் தொடங்கும் வகையில் சம்பூரில் அனல் மின் நிலையத்தை கூட்டு முயற்சியாக அமைக்க 2011 ஆம் ஆண்டில் இந்தியாவும் இலங்கையும் இணங்கியிருந்தன.

ஆனால், மின்சார உற்பத்தி, கொள்வனவு, பராமரிப்பு தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை இலங்கை எழுப்பிவந்தமையால் இந்தத் திட்டம் இதுவரை செயற்படுத்தப்படவில்லை.

இலங்கை தரப்பில் இழுத்தடிக்கப்பட்டு வந்த இந்த உடன்பாட்டுக்கு இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் கடந்த மாதமே அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கைக்கே ஆதரவு; பாகிஸ்தான் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வின் போதும் பாதுகாப்பு சபையிலும் இலங்கைக்கு தொடர்ந்தும் பாகிஸ்தான் ஆதரவை வழங்கும் என்று பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் செரீப் தெரிவித்துள்ளார்.

இல்ங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் நேற்று முன்தினம் நவாஸ் செரீப்பை சந்தித்த போதே இந்த உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படுவதற்கு பாகிஸ்தான் தமது உதவிகளை வழங்கியது.

அதேநேரம் இலங்கையுடன் பொருளாதார ஒத்துழைப்பை பேணவும் பாகிஸ்தான் விரும்புகிறது என்றும் செரீப் குறிப்பிட்டார். (அ-2)

# வாஸ்குணவர்த்தனவுக்கு எதிராக மற்றொரு வழக்கு

(கொழும்பு)

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராக மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி வர்த்தகரான மொஹமட் சியாம் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராகவே இப் புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி வர்த்தகரான மொஹமட் சியாம் படுகொலையை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரி அபேசேகர உள்ளிட்ட குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமைக்கு எதிராகவே அவர் மேல் மற்றுமொரு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரை நாளை திங்கட்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோட்டை பிரதான நீதவான் திலின கமகே வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பணித்தார். (அ-2)

# இளைஞர் பாராளுமன்ற அமர்வில் நவிப்பிள்ளை

(தனங்கிளப்பு)

இளைஞர் பாராளுமன்றத்தின் 3 ஆவது அமர்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளன. இவ் அமர்வுகளில் 13 ஆவது சீர்திருத்தம் தொடர்பான விவாதம் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களால் நடத்தப்படவுள்ளது.

இதில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் கலந்து கொள்வாரென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-9-37)




★1580 - ஸ்பெயின் அல்காண்டரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் போர்த்துக்கலை வென்றது.

★1609 - இத்தாலிய வானியல் அறிஞர் கலிலியோ கலிலி தனது முதலாவது தொலைநோக்கியை அறிமுகப்படுத்தினார்.

★1732 - யாழ்ப்பாணத் தளபதியாக கோல்ட்டெரஸ் வூல்ட்டெரஸ் நியமிக்கப்பட்டான்.

★1758 - பிரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக் மன்னன் சோண்டோர்ஃப் என்ற இடத்தில் ரஷ்ய இராணுவத்தைத் தோற்கடித்தான்.

★1768 - ஜேம்ஸ் குக் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தான்.

★1803 -யாழ்ப்பாணம் பனங்காமம் பற்று மன்னன் பண்டாரவன்னியன் விடத்தல் தீவைக் கைப்பற்ற எடுத்த முயற்சி மேஜர் வின்செண்ட் என்பவனால் முறியடிக்கப்பட்டது.

★1825 -உருகுவே நாடு பிரேசிலிடமிருந்து விடுதலையை அறிவித்தது.

★1830 - பெல்ஜியப் புரட்சி ஆரம்பமானது.

★1912 - சீனத் தேசியவாதிகளின் குவாமிங்தாங் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★1920 - போலந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் ஓகஸ்ட் 13 இல் ஆரம்பித்த போர் செம்படையினரின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது.

★1944 - இரண்டாம் உலகப் போர்: பாரிஸ் நாசி ஜேர்மனியிடம் இருந்து நட்பு நாடுகளால் விடுவிக்கப்பட்டது.

★1955 - கடைசி சோவியத் படைகள் ஆஸ்திரியாவை விட்டு வெளியேறின.

★1981 - வொயேஜர் 2 விண்கலம் சனிக்கு மிக அண்மையாகச் சென்றது.

★1989 -வொயேஜர் 2 விண்கலம் நெப்டியூனுக்குக் அண்மையாகச் சென்றது.

★1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து பெலருஸ் பிரிந்தது.

**பிறப்புகள்**

★1906 - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (இ. 1993)

★1929 - எஸ். வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை, பாடகி

★1952 - விஜயகாந்த், தமிழ்த் திரைப்பட நடிகர், அரசியல்வாதி

**இறப்புகள்**

★**1822 - வில்லியம் ஹேர்ச்செல், வானியலாளர் (பி. 1738)**


★1867 - மைக்கேல் பரடே, ஆங்கிலேய அறிவியலாளர் (பி. 1791)

★2008 - தா. இராமலிங்கம், ஈழத்துக் கவிஞர் (பி. 1933)

★2012 - நீல் ஆம்ஸ்ரோங், சந்திரனில் தரையிறங்கிய முதல் மனிதர் (பி. 1930)

**வில்லியம் ஹேர்ச்செல்**

சேர் பிரெடெரிக் வில்லியம் ஹேர்ச்செல் 1738 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி ஜேர்மனியில் பிறந்த பிரித்தானிய வானியலாளர் ஆவார். இவர் 1781 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தமைக்காகச் சிறப்புப் பெற்றார். இதுதவிர அகச்சிவப்புக் கதிர் போன்ற பல வானியல் கண்டுபிடிப்புகளை உலகிற்குத் தெரிவித்தார். இவர் மேலும் கண்டுபிடித்த சந்திரன்களாக 1787 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஒபரோன் டைட்டானியா, 1789 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி என்செலடஸ், 1789 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி மைமாஸ் ஆகியனவாகும். இவர் 1822 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி உயிர் நீத்தார்.



# அருங்கலைகள் பேரவையின் இலவச பற்றிக் பயிற்சி நெறி

தேசிய அருங்காட்சி கலைகள் பேரவையினர் யாழ். மாவட்டத்தில் மேலதிக பற்றிக் பயிற்சி நெறியை இலவசமாக பயிற்றுவிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக தேசிய அருங்கலைகள் பேரவை அபிவிருத்தி உதவியாளர் க.நவதர்சன் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சிநெறியில் பற்றிக் தொடர்பான மேலதிக தொழில்நுட்ப விடயங்கள் உள்ளடங்குவதுடன் பயிற்சிக் காலம் ஒரு மாத காலத்தை கொண்டதாக அமையும். மேலும் பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படும். கொழும்பில் இருந்து வருகை தரும் வளவாளர்களே பயிற்சிகளை வழங்குவர்.

இப் பயிற்சி முடிவின் பின்னர் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன் அவர்களில் சிலர் திறமையின் அடிப்படையில் போதனாசிரியர்களாக உள்வாங்கப்படவும் உள்ளனர்.

எனவே, இத்துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்கள் மற்றும் ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை இம்மாதம் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் தேசிய அருங்கலைகள் பேரவை, மாவட்ட அலுவலகம், தொழிற்றுறை திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2-37)

# வாக்களிப்பு நிலையங்களை பாதுகாக்க பொலிஸார் வரவழைக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் வாக்களிப்பு நிலையங்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கு வெளி மாவட்டங்களிலிருந்து பொலிஸார் வரவழைக்கப்படவுள்ளனர் என காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எம்.பத்திநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ். பொலிஸ்;நிலையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் நடைபெற்ற நீதியான தேர்தல்கள் போல் இம்முறையும் வடக்கு தேர்தல் நடைபெறும் எனவும் அத்தியட்சகர் தெரிவித்தார். இம்முறை தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்களிப்பு நிலையங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு அதிகளவு எண்ணிக்கையிலான பொலிஸார் தேவைப்படுவர்.

இதனை நிவர்த்தி செய்வதற்கும் நீதியான தேர்தல் இடம்பெறுவதற்கும் வெளி மாவட்டங்களிலிருந்து மேலதிகமான பொலிஸார் வரவழைக்கப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு பெரும் நெருக்கடியான களமாகும் கொமன்வெல்த் மாநாடு

**54** நாடுகள் அங்கம் வகிக்கும் கொமன்வெல்த் அமைப்பில் ஒரு சில நாடுகள் மாநாட்டைப் புறக்கணிப்பதால் இலங்கைக்குப் பெரிதாக எந்தப் பாதிப்பும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. அத்தகைய முடிவு இலங்கைக்கு சிறிய ஏமாற்றத்தைக் கொடுக்கலாம். சர்வதேச அளவில் ஒரு செய்தியைக் கொடுக்கலாம். ஆனால், இலங்கை அரசாங்கம் மாநாட்டை எந்தக் கலக்கமும் இன்றி நிம்மதியாக நடத்தி முடித்துவிடும். ஏனென்றால், கொமன்வெல்த் அமைப்பிலுள்ள ஆபிரிக்க, ஆசிய நாடுகள் பலவற்றை இலங்கை தன் கைக்குள்போட்டு வைத்துள்ளது.

பெரிய நாடுகளின் எதிர்ப்பு இருந்தாலும் பெரும்பான்மையாக உள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் ஆதரவினால் இலங்கை அரசு நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளும். அதேவேளை கனடா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள், மாநாட்டில் பங்கேற்றால், நிச்சயம் இலங்கையின் மனிதஉரிமைகள் நிலைகுறித்து கேள்விகளை எழுப்ப வாய்ப்புக்கள் உள்ளன. அதுமட்டுமன்றி, கொமன்வெல்த்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் இலங்கை மீது கொமன்வெல்த்தின் பெறுமானங்களையும் கடமையையும் பாதுகாக்கும் வகையில் செயற்படும் அழுத்தங்களைக் கொடுக்க முடியும்.

கொழும்பில் நடக்கவுள்ள கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற சூழலில் இலங்கை அரசாங்கம் மாநாட்டுக்கான ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. 54 நாடுகள் அங்கம் வகிக்கும் கொமன்வெல்த் அமைப்பின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் பங்கேற்கும்படி உறுப்பு நாடுகளின் ஜனாதிபதி அல்லது பிரதமருக்கான அழைப்பிதழ்களை இலங்கை அரசாங்கம் அனுப்பத் தொடங்கியுள்ளது. இந்தியப் பெருங்கடலின் பெரும் வல்லரசும் இலங்கையின் அண்டை நாடும் கொமன்வெல்த் அமைப்பிலேயே அதிக சனத்தொகையைக் கொண்ட மிக முக்கியமான நாடுமான இந்தியாவின் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அழைப்பிதழை கையளித்துள்ளார் ஜி.எல்.பீரிஸ்.

கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவர் இந்த அழைப்பை ஏற்பாரா இல்லையா என்று உறுதியாகவில்லை. கொழும்பு கொமன்வெல்த் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்ற அழுத்தங்களை அதிகளவில் சந்திக்கின்ற நாடுகள் என்றால் இந்தியா, கனடா, பிரித்தானியா ஆகிய நாடுகள்தான்.

இந்த மூன்று நாடுகளிலும் தமிழர்கள் கணிசமாக வாழ்வது மட்டும் இதற்குக் காரணமல்ல.

இந்த மூன்று நாடுகளும் கொமன்வெல்த் அமைப்பில் மிக முக்கியமான நாடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்குத் தமிழ்நாட்டில் இருந்து நெருக்கடி கொடுக்கப்படுகிறது.

கனேடிய அரசுக்கு புலம்பெயர் தமிழர்களின் அழுத்தமும் மனித உரிமைகள் தொடர்பான அதன் பார்வையும் இந்த புறக்கணிப்பு அழுத்தத்தைக் கொடுக்க வைக்கிறது. பிரித்தானியாவைப் பொறுத்தவரையில் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளினது அழுத்தங்கள் மட்டுமன்றி, கொமன்வெல்த் தொடர்பான அதன் தலைமைத்துவக் கடப்பாடும் அழுத்தங்களைக் கொடுத்திருக்கிறது.

இலங்கையில் மனித உரிமைகள் நிலையில் முன்னேற்றம் ஏற்படாது போனால் தாம் கொழும்பு உச்சி மாநாட்டைப் புறக்கணிக்க நேரிடும் என்று கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாபர் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே எச்சரித்து வருகிறார். இதற்கு இலங்கை அரசாங்கம் செவிசாய்க்கவேயில்லை. அதேவேளை இதுவரை கனடா உள்ளிட்ட எந்த நாடுமே கொமன்வெல்த் உச்சிமாநாட்டை முழுமையாகப் புறக்கணிக்கப்போவதாக அதிகாரபூர்வதாக அறிவிக்கவும் இல்லை. கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் ஹெமரூனுடன் புலம்பெயர் தமிழர்கள் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதேவேளை, கனேடியப் பிரதமர் புறக்கணிப்பு விடயத்தில் உறுதியான நிலையில் இருப்பதாகவே தெரிகிறது. இந்த நிலையில் கனடா இந்தியா போன்ற நாடுகளில் கொமன் வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கக் கூடாது என்ற கருத்துக்கள் தீவிரமடைந்து வருகின்றன.

கனடாவின் கொமன்வெல்த் புறக்கணிப்பு அழைப்பை அவுஸ்ரேலியா, நியூஸ்சிலாந்து, பிரித்தானியா போன்ற சக ஆங்கிலேய ஆட்சி நாடுகள் ஏற்றுக்கொள்ளாதபோது இந்த விடயத்தில் கனடா தனிமைப்பட்டுப் போகும் என்ற அச்சத்தை சில ஆய்வாளர்கள் எழுப்பியுள்ளனர். அதுமட்டுமன்றி, கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கும் கனடாவின் தனி முயற்சி இலங்கையில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரப்போவதில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

கிட்டத்தட்ட இதே கருத்து இந்திய இராஜதந்திர மட்டங்களிலும் காணப்படுகிறது. அதாவது மாநாட்டைப் புறக்கணிக்கும் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் அதில் பங்கேற்பதன் மூலமே இலங்கை மீது அழுத்தங்களை அதிகரிக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இந்திராகாந்தி காலத்தில் இலங்கை விவகாரங்களைக் கையாண்ட இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியான ஜி.பார்த்தசாரதி இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளவர்களில் முக்கியமானவர். ஏனைய உலகத் தலைவர்களுடன் தனியாக சந்திக்கவும் அவர்களுடன் இணைந்து இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுக்கவும் மன்மோகன்சிங்கிற்கு கொமன்வெல்த் மாநாடு அருமையான வாய்ப்பை கொடுக்கும் என்று அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதே கருத்து பிரித்தானிய அரசாங்கமட்டத்திலும் உள்ளது.




பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரூனும் வெளிவிவகார அமைச்சரும் இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்கு கொமன்வெல்த் மாநாட்டை பயன்படுத்திக் கொள்வார்கள் என்று பிரித்தானிய அதிகாரி ஒருவர் அண்மையில் கூறியிருந்தார் என்பதையும் கவனத்தில் கொள்ளலாம்.

தமிழ்நாட்டின் அழுத்தங்கள் இருந்தாலும் கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கின்ற அளவுக்கு மன்மோகன்சிங் முடிவெடுக்கமாட்டார் என்றே பொதுவான கருத்து உள்ளது. ஆனால், அவர் கடைசி நேரம்வரை, அதை உறுதிப்படுத்திக்கொள்ளாமல் இழுத்தடித்து சில காரியங்களைச் சாதிக்க முனையலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் வாக்குறுதிகளை சாதாரணமாக நிறைவேற்றப்போவதில்லை என்பதை உணர்ந்துள்ளது. கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலமே அதனைத் தன் வழிக்கு கொண்டு வர முடியும் என்ற பாடத்தை இந்தியா நன்றாகவே கற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, தனது இலக்கை எட்டுவதற்கு இந்திய அரசாங்கம், கொமன்வெல்த் மாநாட்டை உச்சக்கட்டமாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்றே தெரிகிறது. அதேவேளை, இந்த மாநாட்டைப் புறக்கணிப்பதன் மூலம் இலங்கையை வழிக்குக் கொண்டுவர முடியாது என்பதை பல நாடுகள் உணர்ந்துள்ளன. அதாவது புறக்கணிப்பு அழைப்புகளுக்கு இலங்கை பயந்து போயிருந்தால் எப்போதோ தனது போக்கில் மாற்றங்களைச் செய்ய முனைந்திருக்கும். ஆனால், மாநாடு நடக்க இன்னமும் மூன்று மாதங்களே உள்ள நிலையில் அதற்கான எந்த அறிகுறிகளுமே தெரியவில்லை.

கனடாவோ, பிரித்தானியாவோ, இந்தியாவோ எதிர்பார்க்கும் மாற்றங்கள் இந்த மூன்று மாதங்களில் ஏற்பட்டுவிடப் போவதில்லை. எனவே, மாநாட்டுப் புறக்கணிப்புக்கு அப்பால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் உத்திகள் குறித்தே இந்த நாடுகள் இனிமேல் கவனம் செலுத்த வாய்ப்புகள் உள்ளன.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் கொமன்வெல்த் அமைப்பில் ஒருசில நாடுகள் மாநாட்டைப் புறக்கணிப்பதால் இலங்கைக்குப் பெரிதாக எந்தப் பாதிப்பும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. அத்தகைய முடிவு இலங்கைக்கு சிறிய ஏமாற்றத்தைக் கொடுக்கலாம். சர்வதேச அளவில் ஒரு செய்தியைக் கொடுக்கலாம். ஆனால், இலங்கை அரசாங்கம் மாநாட்டை எந்தக் கலக்கமும் இன்றி, நிம்மதியாக நடத்து முடித்துவிடும். ஏனென்றால் கொமன்வெல்த் அமைப்பிலுள்ள ஆபிரிக்க, ஆசிய நாடுகள் பலவற்றை இலங்கை தன் கைக்குள் போட்டு வைத்துள்ளது. பெரிய நாடுகளின் எதிர்ப்பு இருந்தாலும் பெரும்பான்மையாக உள்ள ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் ஆதரவினால் இலங்கை அரசு நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளும்.

அதேவேளை, கனடா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள், மாநாட்டில் பங்கேற்றால், நிச்சயம், இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்து கேள்விகளை எழுப்ப வாய்ப்புகள் உள்ளன. அதுமட்டுமன்றி கொமன்வெல்த்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் இலங்கை மீது கொமன்வெல்த்தின் பெறுமானங்களையும் கடமையையும் பாதுகாக்கும் வகையில் செயற்படுமாறு அழுத்தங்களைக் கொடுக்க முடியும்.

இது இலங்கைக்கு பெரும் நெருக்கடியாக அமையலாம்.

இத்தகைய அழுத்தம் கொடுக்கப்படுவதையே இந்திய, கனேடிய, பிரித்தானிய ராஜதந்திர மட்டங்களில் விரும்பப் படுவதாகத் தெரிகிறது.

பெரும்பாலும் இத்தகைய நிலை உருவாகவே வாய்ப்புகளும் உள்ளன.

கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கக் கோரும் அழைப்புகளை தாம் முடியடித்துவிட்டதாக அரசாங்கம் பிரசாரம் செய்தாலும் அது எத்தகைய எதிர்விளைவாக உருவெடுக்கும் என்பதை இந்த மாநாட்டில்தான் இலங்கை உணர்ந்து கொள்ளும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களின் துன்பங்களை ஆராய்ந்து ஐ.நாவில் அறிக்கை தாக்கல் செய்யுங்கள்

## நவிப்பிள்ளையிடம் கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

**இலங்கை நிலவரங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ளவுள்ள நவநீதம்பிள்ளை ஈழத் தமிழர்களின் துயரம் தொடர்பாக ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று இலங்கை பயணிக்கவுள்ளார். டெசோ சார்பில் ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு கடந்த 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றது.

இதில் ஈழ விவகாரம் தொடர்பாக பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களை தி.மு.கவின் பொருளாளர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் ஜெனீவாவிற்கு நேரில் சென்று நவநீதம்பிள்ளையிடம் கையளித்தனர்.

மேலும் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு நேரில் பயணித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று தி.மு.க. சார்பில் அப்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரான நவநீதம்பிள்ளையே 38 பக்கங்கள் கொண்ட ஓர் அறிக்கையைத் தயாரித்தளித்தார்.

தற்போது இலங்கையில் வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதற்கு முன்பே அங்கு திட்டமிட்டு முறைகேடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. தமிழர்களுக்கான நிவாரண உதவிகள் முறையாக சென்றடையவில்லை. இவற்றையெல்லாம் சரி செய்து இலங்கையில் அடிப்படை ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சியை நவநீதம்பிள்ளை மேற்கொள்வார் என உலகத் தமிழர்கள் ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்றனர்.

எனவே, இலங்கை செல்லும் நவநீதம்பிள்ளை ஈழத் தமிழர்களின் துன்பங்களையெல்லாம் நேரில் அறிந்து ஐ.நா.முன்பு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (அ-2)

# முதலாம் வினைத்திறன்காண் தடை பரீட்சை நவம்பரில்

(கொழும்பு)

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவ் அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையிலோ வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

# இறக்குமதி வரி அதிகரிப்பு

உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி நேற்று முன்தினத்தில் இருந்து அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிட்டல் அமைச்சு அறிவித் துள்ளது.

இதன்படி ஒரு கிலோ உருளைக்கிழங்கு 15 ரூபாவாலும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 5 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் விவசாயிகளின் நலனைக் கருத்திற் கொண்டு இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதிதிட்டமிட்டல் அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# டி.சி.டி. இரசாயன பிரச்சினையால் விலகுகின்றது பால்மா நிறுவனம்

பால்மா வகைகளில் டி.சி.டி இரசாயனப் பதார்த்தம் காரணமாக எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையில் இலங்கையுடனான கூட்டுறவு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க தீர்மானித்துள்ளதாக நியூசிலாந்தின் பொன்டேரா பால்மா உற்பத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொன்டேரா உற்பத்திகளுக்கு தடை விதித்து கம்பஹா மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளமை சிறந்தது. 755 சேவையாளர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள எமது பண்ணைகள் மற்றும் அலுவலகங்களை மூடியுள்ளோம். சேவையாளர்களை வீட்டில் இருக்குமாறு கூறியுள்ளோம். இவ்வாறு பொன்டேரா நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி தியோ ஸ்பிரிங்ஸ் தெரிவித்துள்ளார்.

அண்மைய நிகழ்வுகளின் மத்தியிலும் இக்கட்டான நிலையில் தினசரி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தோம். பிரச்சினை தீர்க்கப்படவேண்டிய தேவை உள்ளது என பொன்டேரா நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி தியோ ஸ்பிரிங்ஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ரொய்டர் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# பண்டார நாயக்க இல்லத்தில் இளவரசர் சார்ல்ஸ் தங்குவார்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்கவுள்ள பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் பண்டாரநாயக்க இல்லத்தில் தங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

றொஸ்மண்டட் பிளேசில் அமைந்துள்ள பண்டாரநாயக்க இல்லத்தில் இளவரசர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய உலகத் தலைவர்களில் அநேகமானவர்கள் சினமன் கிராண்ட் ஹோட்டலில் தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். அதன்போது சினமன் கிராண்ட் மற்றும் பண்டாரநாயக்க இல்லம் ஆகியவற்றைக் கண் காணித்து பண்டாராநாயக்க இல்லத்தில் தங்குவது இளவரசருக்கு உசிதமானது என தீர்மானித்துள்ளனர்.

பண்டாரநாயக்க வளவு என அழைக்கப்பட்ட இந்த பண்டாரநாயக்க இல்லத்தில் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இல்லத்திலேயே 1959 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானார். (அ-2)

# இலவச மருத்துவ முகாம்

(தும்பளை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் வயோதிபர்களுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பருத்தித்துறை தம்பசிட்டி சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் டாக்டர் சுபேக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில் நீரிழிவு, பொது மருத்துவம், சுகாதாரம், கண் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன.

கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கப்படவுள்ளமையால் தேவையுடையவர்கள் மருத்துவ முகாம் ஆரம்பமாகும் நேரத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் ச.தங்கராசா அறிவித்துள்ளார். (அ-9-19-10)

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கால்நடைகள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தொழில்நுட்ப சேவை பிரிவில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளாக க.பொ.த.உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதத்துறையில் கணிதம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம், தமிழ், ஆங்கிலமொழி, கணிதம் உட்பட ஏனைய இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளபடி டிப்ளோமா சான்றிதழ் ஒன்றும் பெற்றிருக்க வேண்டும்.

மேலும் இத்தகைமைகளுடன் குறித்த துறையில் 3 வருட கால அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவை தபாலகத்தில் செலுத்தி காசுக்கட்டளையையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்பதாக செயலாளர், கால்நடைகள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு, இல. 45, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு 3 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்விண்ணப்பம்கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானி பத்திரிகையிலோ வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (அ)



கலாபூஷண்ம் இராசையா ஸ்ரீதரன் எழுதிய குழந்தைகளுக்கான மழலைச் செல்வம் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூலின் முதற் பிரதியை நல்லை ஆதீன முதல்வரிடமிருந்து யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த த.இரத்தினசபாபதி பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.கபில்ஸ்ரன்**

அன்பின் வியாசரே!

பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும். பிணம் என்றால் உறவினர்கள் ஊர்ப்பக்கம் சென்று விடுவார்கள்.இதற்கு உங்கள் கருத்து?

*பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பது உண்மைதான். பிணம் என்றால் உறவினர் ஊர் போய் சேர்வது ஏன் தெரியுமா? நம்மவர்கள்தான் பிண ஊர்வலத்தில் வீதி வீதியாய் வெடி கொளுத்தி ஊருக்கு இடைஞ்சல் செய்வார்களே! முதலில் அதை நிறுத்துங்கள் எல்லாம் சரிவரும்.*

**தர்சிகா யாழ்ப்பாணம்**

அன்பின் வியாசரே!

பாடல்களைப் பாடுபவர் பாடகர். எழுதுபவர்கள் எழுத்தாளர், நடிப்பவர்கள் நடிகர், பதில் சொல்பவர்?

*வியாசர் தான் இதில் என்ன சந்தேகம்.*

**சி.றெபேக்கா, மட்டுவில்**

அன்பின் வியாசரே!

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் நட்பில் தொடங்கி காதலில் முடிவது ஏன்?

*காதலுக்கு கண் இல்லை என்கின்றார்களே! அது இதுதான்.*

**அன்பு வாசகர்களே....!**

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

**க.விமலினி**

அன்பின் வியாசரே!

நாங்கள் உங்களிடம் கேட்பது இவ்வுலகில் தாயா? இல்லாவிட்டால் தந்தையா முக்கியம். எனக்கு நிறைய நாளாக சந்தேகம்?

*இரண்டு கண்களில் எந்தக் கண் முக்கியமானது என்பதற்கு பதில் சொல்லும் அதற்கான பதில்தான் இந்தக் கேள்விக்கான பதிலும்.*

**கன்னிப் பெண்களின் காதல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**




**எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்**

அன்பின் வியாசர் அண்ணா!

இப்போது நம் நாட்டில் திருமணம் முடித்த பெண்களை எப்படி அடையாளம் காண்பது என்று புரியவில்லை. ஏனென்றால் திருமணம் முடித்த பெண்களும் சிவப்பு பொட்டு, முடிக்காத பெண்களும் சிவப்பு பொட்டு. நீங்கள் இதற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்?

*அம்மா விஜிதபாமா... பெண்ணான உங்களுக்கே அவர்களை அடையாளம் காண்பது கடினமாய் இருக்கிறது என்றால் ஆண்கள் நாம் என்ன பாடுபடுவோம் என்று எண்ணிப் பாருங்கள்.*

**பொறுப்பு வாய்ந்த பதவியில் அமர்ந்து கொண்டு பதவிக்கேற்றால் போல் பணியாற்றாத அதிகாரிகளை பற்றி தங்கள் பதில் என்ன?**

**வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி**

அன்பின் வியாசரே!

கன்னிப் பெண்களின் காதல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*கன்னிப் பெண்களின் காதல் மாசி மாதம் பூக்கிற மாம் பூப்போல் சின்ன மழை வந்தாலே போதும் எல்லாம் கொட்டி விடும்.*

**பா.பிரேமதாஸ், காரையடி.**

அன்பின் வியாசர் அண்ணா!

பொறுப்பு வாய்ந்த பதவியில் அமர்ந்து கொண்டு பதவிக்கேற்றால் போல் பணியாற்றாத அதிகாரிகளை பற்றி தங்கள் பதில் என்ன?

*தன் கடமையை சரியாகச் செய்யாத கதிரையும் வேகமா ஓடாத குதிரையும் அடிவாங்காமல் விட்டதாக சரித்திரமே இல்லை.*

**கொஞ்சம் சிரிங்கப்பா...**




**உதயன், ஊர்காவற்றுறை**

வியாசர் அண்ணா!

காதல் தோல்வியால் அநேக இளம் பெண்கள் தற்கொலை செய்கின்றார்களே. எங்கள் ஊரில் இந்த வாரத்தில் மட்டும் மூன்று இளம் பெண்கள் தற்கொலை செய்துள்ளார்கள். தடுக்க வழி என்ன?

*உண்மையான காதல் தோற்றுப் போனால் ஏற்படும் வலி கொடுமையானதுதான். அதற்கு தற்கொலை முடிவில்லையே! உன்னை யார் ஏமாற்றினாரோ அவருக்கு சிறப்பாய் வாழ்ந்து காட்டுவதுதான் உண்மையான காதலின் பரிசு.*

**சு.ஜெயரூபன் பருத்தித்துறை**

அன்பின் வியாசரே!

தங்களுக்கு யார் மேலாவது கோபம் வந்தால் உடனே என்ன செய்வீர்கள்?

*ஒரு வெற்றுப் பேப்பரை எடுத்து அவரின் கோபத்தையெல்லாம் அதில் கிறுக்கித் தள்ளுவேன். பின்பு அதை யாருக்கும் தெரியாமல் எரித்து விடுவேன்.*

**கே.எஸ்.சிவஞானராஜா**

அன்பின் வியாசரே!


நீங்களும்நானும்ஜப்பானில்பிறந்திருந்தால்?

*சத்தியமாக ஜப்பான் உருப்பட்டிருக்கமாட்டாது. (ஏனென்றால் நாம் இலங்கையராச்சே)*

# சர்வதேச கடல் எல்லையை தாண்டி இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கக் கூடாது

## விழிப்புணர்வு ஏற்படுத்த கோருகிறார் குர்ஷித்

**இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் சென்று மீன்பிடிக்கக் கூடாது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.**



தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்து ராஜ்யசபாவில் அண்மையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டு விவாதம் நடைபெற்றது. விவாதத்திற்கு பதில் அளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருதரப்பு மீனவர்களும் கைது செய்யப்படும் விவகாரம் இரு நாடுகளுக்கும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு ஒரே தீர்வு இரு நாட்டு மீனவர்களும் இணைந்து பேச வேண்டியதே.

இரு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தினால் இணக்கமான சூழ் நிலையையும் தீர்வையும் எட்டமுடியும். இந்த யோசனையை செயற்படுத்த இலங்கை அரசு தயாராக உள்ளது.

தமிழக அரசும் மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்திய மீனவர்களிடையே சுமுகமான நல்லுறவு நிலவ வேண்டும். இரு தரப்புமே பரஸ்பரம் புரிதலுடன் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவது சரியாக அமையும். இந்தியாவைப் பொறுத்த வரை அது இலங்கையுடன் நட்புறவாக இருக்கவே விரும்புகிறது.

ஆனால், மீனவர்கள் கைது செய்யப்படுவது இரு நாடுகளுக்கும் ஒரே பிரச்சினையாகவே உள்ளது. இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வு இந்திய மற்றும் இலங்கை மீனவர்கள் இணைந்து பேச வேண்டும். இந்திய மீனவர்கள் 106 பேர் தற்போது இலங்கை சிறையில் உள்ளனர். இலங்கை மீனவர்கள் எவரும் இந்தியாவில் இல்லை. கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் அனைவருமே அந் நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டனர்.

கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை உடனடியாக திருப்பி அனுப்ப முடியாத நிலை இலங்கை அரசுக்கு உள்ளது. அங்கு மாகாண சபை தேர்தல் நடைபெற இருப்பதால் மீனவர்களை திருப்பி அனுப்புவதற்கு இயலாத நிலை ஏற்பட்டு உள்ளதாக தெரிகின்றது.

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக சர்வதேச கடல் எல்லையை தாண்டிச் சென்று மீன் பிடிக்கக் கூடாது என்ற விழிப்புணர்வை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் க்ச்ச தீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு குறித்து உயர் நீதிமன்றம் கூறும் அறிவுரைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மாணவர்கள் தொடர்பில் அதிக கவனம் தேவை

## பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

நாட்டில் இன்று நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் 60 மாணவ, மாணவியர் திடீர் விபத்துக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வாகன விபத்து உள்ளிட்ட விபத்துக்களாலும் திடீர் சுகயீனம் காரணமாகவும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் 60 மாணவ ,மாணவியர்பாதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இவர்களில் சிலர் பரீட்சைக்கு தோற்ற முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதான பரீட்சைக்குத் தோற்றும் தமது பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வெலிவேரிய சம்பவம் தொடர்பில் நவிப்பிள்ளையிடம் முறையிடுவோம்

(கொழும்பு)

இலங்கைக்கு இன்று விஜயம் மேற்கொள்ளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் நவநீதம்பிள்ளையிடம் வெலிவேரிய சம்பவம் தொடர்பில் தகவல்களை முன்வைக்க போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர உறுதியாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் மக்களின் மனித உரிமைகளை மீறுவது தொடர்பாக நவநீதம்பிள்ளையிடம் முறைப்பாடு தெரிவிக்கப்படும்.

குறித்த சம்பவம் இதற்கு சிறந்த உதாரணம் என்பதால் அது பற்றிய தகவல்கள் அவரிடம் முன்வைக்கப்படும்.

ஏற்கனவே இந்த சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டை செய்துள்ளது.

இதேவேளை, நவநீதம்பிள்ளையுடனான சந்திப்பில் கலந்து கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் அவருடன் பேச வேண்டிய விடயங்கள் தொடர்பில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் அண்மையில் சிறிகொத்தவில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நவநீதம்பிள்ளையை ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல அரசியல் கட்சிகள் சந்திக்க தயாராகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜித் படத்தில் ஆர்யா குறும்புத்தனம்



விஷ்ணுவர்த்தன் இயக்கத்தில் அஜித் நடித்து வெளிவர இருக்கும் ஆரம்பம் படத்தில் குறும்புத்தன்மான கதாபாத்திரத்தில் கலக்கி இருக்கிறார் நடிகர் ஆர்யா.

விஷ்ணுவர்த்தன் இயக்கத்தில் அஜித், நயன்தாரா, ஆர்யா, டாப்சி என நட்சத்திரப்பட்டாளமே நடிக்கும் படம் 'ஆரம்பம்"

அஜித் படங்கள் என்றால், ரசிகர்கள் ரொம்பவும் எதிர் பார்ப்பது அவரது குறும்புத்தனமான நடிப்பைத் தான்.

அதிலும் நெடுங்காலமாக பேரே வைக்காமல் தயாராகி வந்த விஷ்ணுவர்த்தன் படத்தில் அஜித்தின் கதாபாத்திரம் மிகவும் குறும்புத்தனமாக இருக்கும் என ரசிகர்கள் ஆவலாக காத்திருக்க, அதெல்லாம் இல்லீங்க என மறுத்துள்ளார் விஷ்ணுவர்த்தன். சமீபத்தில் இப்படம் சம்பந்தமாக மனம் திறந்துள்ளார் விஷ்ணுவர்த்தன்.

ஆரம்பம் படத்தில் குறும்புத்தன்மான கதாபாத்திரத்தில் அஜித் நடித்திருப்பதாக ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் படத்தில் அதிக குறும்புத்தனம் காட்டியிருப்பது ஆர்யா தான் எனக் கூறியுள்ளார் விஷ்ணுவர்த்தன்.

# 4 ஹீரோயின்கள் இணையும்...



குளுகுளு நாட்கள் என்ற படத்தில் 4 ஹீரோயின்கள் நடிக்கின்றனர். இது பற்றி இயக்குநர் காதர் ஹசன் கூறுகையில்,

அமெரிக்க கலாசாரத்தில் படித்த ஒரு மாணவி, இந்திய கலாசாரத்தில் வளர்ந்த ஒரு மாணவி உள்ளிட்ட 4 தோழிகள் ஒரே பாடசாலையில் பிளஸ் 2 படிக்கிறார்கள். மேல்படிப்புக்காக கோஎஜுகேஷன்கூடிய பொறியியல் கல்லூரியில் சேர்கின்றனர். மேலைநாட்டு கலாசாரத்தில் மூழ்குகின்றனர் மாணவ, மாணவிகள்.

இதன் விளைவு என்னவாகிறது என்பதே கதை. ஹீரோவாக புதுமுகங்கள் ஸ்ரீஜித் விஜய், ஹரிஸ், அர்ஜுன், சாபி, ஹீரோயின்களாக மாளவிகா, ரைசா, சுபிக்ஷா, ஆஷா நடிக்கின்றனர். உல்பல் ஒளிப்பதிவு செய்கிறார். வி.பிரபாகரன் வசனம் எழுதுகிறார். பர்ஹன் ரோஷன் இசை அமைக்கிறார்.

# நாயகனாக கவுண்டமணி




தமிழ் சினிமாவின் சிரிப்பு சரித்திரத்தை கவுண்ட மணியின் பெயர் இல்லாமல் எழுத முடியாது. இப்போதும் அவரின் காமெடிக் காட்சிகளை ஒளிபரப்பாமல் எந்த ஒரு டி.வி. சனலும் இல்லை.

கவுண்டமணி நாயகனாக நடிக்க இருக்கிறார் என்பது தான் திரையுலகில் இன்றைய ஸ்பெஷலாக இருக்கிறது. இதுவரை 600-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார் கவுண்டமணி. நாயகனாகவும் சில படங்களில் நடித்து இருக்கிறார். இந்நிலையில் மீண்டும் நாயகனாக நடிக்க சம்மதம் தெரிவித்து இருக்கிறாராம் கவுண்டமணி. தற்போது சாந்தனு உடன் "வாய்மை" என்ற படத்தில் நடித்து வருகிறார் கவுண்டமணி.

அதனைத் தொடர்ந்து இயக்குநர் வெற்றிமாறன் தயாரிக்கும் படத்தில் நாயகனாக நடிக்க இருக்கிறாராம். வெற்றிமாறனின் உதவியாளர் இப்படத்தினை இயக்குவார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

படத்தின் முழுக்கதையையும் கேட்டு சம்மதம் தெரிவித்து இருக்கிறாராம். விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாக இருக்கிறது.

# அப்பாவுடன் நடிக்க நேரமில்லை



தமிழ், தெலுங்கு , இந்தி என பல மொழிகளில் கலக்கி வரும் ஸ்ருதிக்கு தனது தந்தையுடன் நடிப்பதற்கு நேரமில்லை என்று வருத்தப்படுகிறாராம்.

இதுகுறித்து அவர் கூறுகையில், அழுத்தமான கதாபாத்திரங்கள், அழுத்தமான இசை எனக்கு பிடிக்கும். தமிழில் ஏற்ற 3 பட கதாபாத்திரம், இந்தியில் டி டே படத்தில் ஏற்ற கதாபாத்திரம் போன்றவை அழுத்தம் நிறைந்தது.

நல்ல வேடம் என்றால் அதில் கவனம் செலுத்துகிறேன். நிறைய படங்களை நான் ஒப்புக்கொண்டிருப்பதால் எனது தந்தை கமலுடன் நடிக்க நேரம் இல்லை.

எதிர்காலத்தில் அது நடக்கும். இப்போதைக்கு என்னை நினைத்து அவர் பெருமைப்படுவார். எனது பெற்றோர் இரு வருமே நடிகர்கள்தான். ஆனாலும் நான் நடிக்க ஒப்புக்கொள் ளும் படங்கள் பற்றி அவர்களிடம் கருத்து கேட்பதில்லை. நான் நடிக்கும் படங்களை நானே தேர்வு செய்து நடிக்கிறேன் என்கிறார் ஸ்ருதி.

# நயன்தாரா சினிமாவில் கால்பதித்து 10 ஆண்டுகள்



சினிமாவில் கால்பதித்து 10 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார் நயன்தாரா.

2003ஆம் ஆண்டு "Manassinakkare" என்ற மலையாளப் படம் மூலம் திரையுலகில் நுழைந்தவர் நயன். 2005ஆம் ஆண்டு வெளியான "ஐயா" படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக தமிழில் அறிமுகமானார்.

அடுத்த படத்திலேயே ரஜினிக்கு ஜோடியாக நடித்தார். பிறகு, சூர்யா, விஜய், சிம்பு, ஜீவா, அஜித், தனுஷ், ஆர்யா என தமிழின் முன்னணி நடிகர்கள் அத்தனை பேருடனும் ஜோடி சேர்ந்து நடித்துவிட்டார். அதேபோல், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என தென்னிந்திய மொழிகளின் முதற்தர நாயகியாக வலம் வந்தவர்.

போதும் போதும் என்று சொல்கிற அளவுக்கு அவருக்கு வாய்ப்புகள் குவிந்து கொண்டே இருக்கின்றன. ஆர்யாவுடன் "ராஜா ராணி", உதயநிதியுடன் "இது கதிர்வேலன் காதல்", அஜித்துடன் "ஆரம்பம்", "ஜெயம்" ரவிக்கு ஜோடியாக பெயரிடப்படாத ஒரு படம், தமிழ், தெலுங்கில் ஒரே நேரத்தில் தயாராகும் "அனாமிகா", கோபிசந்த்துக்கு ஜோடியாக "ஜெய் பாலாஜி" என நயனின் கால்ஷீட் டைரி இன்னும் சில வருடங்களுக்கு நிரம்பி இருக்கிறது.

# 14 கிலோவை இழந்தார் விக்ரம்

ஷங்கர் இயக்கும் 'ஐ' படத்திற்காக 14 கிலோ உடல் எடையை குறைத்து நடித்துள்ளாராம் விக்ரம்.

தமிழ் சினிமாவில் தற்போது ஷங்கர் இயக்கி வரும் ஐ படம் பலரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இப்படத்தில் சீயான் விக்ரம் அசத்தலான கதாபாத்திரத்தில் நடித்துள்ளாராம்.

இது குறித்து விக்ரம் கூறுகையில், முதலில் 84 கிலோ இருந்தேன். இப்போ 14 கிலோ காலி. நான் எப்படி இருக்கேன்னு பார்க்க எனக்கே ஆசையாக உள்ளது.

விக்ரம், அரிசி சாப்பாடு சாப்பிட்டுப் பல மாதங்கள் ஆகிறதாம். பெரும்பாலும் பச்சைக் காய்கறிகள் அல்லது பழங்கள் தான் பிரதான சாப்பாடு.

காலை, மதியம், இரவு என உணவு வேளையை மறந்தே பல நாட்கள் ஆகிறது. பசியுடன் சாப்பிட அமர்ந்து பசியுடனே எழுந்திருக்க வேண்டும் என்பதே 'ஐ' படத்தின் விதியாம்.

'ஐ' படத்தில் ஒரு பாதியில் இயல்பான விக்ரம். மறுபாதி முழுக்க இந்த சூப்பர் ஸ்லிம் கெட்டப்.

அதனால், படப்பிடிப்பு முடியும் நெருக்கத்தில் இன்னும் கொஞ்சம் மெலிந்து விடுவாராம் நடிகர் விக்ரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் ஊடக சுதந்திரம் தொடர்பில் நவிப்பிள்ளை வலியுறுத்த வேண்டும்

## ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு செயற்குழு வலியுறுத்து

**இலங்கைக்கு இன்று வருகைதரவுள்ள ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஊடக சுதந்திர பாதுகாப்பு குறித்து இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும் என ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு செயற்குழு தெரிவித்துள்ளது.**

"இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் கிடையாது. இலங்கை செல்லும் நவநீதம்பிள்ளை ஊடகவியலாளர்களையும் இலங்கை ஊடகக் கூட்டமைப்பு போன்ற ஊடக சுதந்திர ஆர்வலர்களையும் சந்திப்பார் என நாம் நம்புகிறோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திட்டங்கள் தொடர்பில் அவர்கள் வித்தியாசமான பார்வையில் கருத்து முன்வைப்பர்" என நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் ஊடக சுகந்திர கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

"சுதந்திர பத்திரிகை துறையில் ஒரு அடைப்பை ஏற்படுத்தியுள்ளதில் மகிந்தராஜபக்ஷவிற்கு வரலாறு உள்ளது. அண்மையில் குடிநீர் கேட்டு மக்கள் போரட்டம் செய்த போது அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு படையினரால் கடுமையாக தாக்கப்பட்டனர்."

"ஒரு முக்கியமான சம்பவம் இடம்பெறும் இடத்தில் சுயாதீனமாக செய்தி சேகரிப்பதற்கு ஏற்படுத்தப்படும் தடையை இச்சம்பவம் அடிகோ டிட்டு காட்டுகிறது. எனவே இவை குறித்து பொறுப்புள்ள நவநீதம்பிள்ளை தனது, கண்டனத்தை வெளியிடுவார் என்பதில் ஐயமில்லை" என ஊடக சுகந்திர கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் உள்ளூர்-சர்வதேச ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என நவநீதம்பிள்ளை வலியுறுத்த வேண்டுமென ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு செயற் குழு தெரிவித்துள்ளது.மேலும் காணமற் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வழக்கு குறித்து அரசாங்கம் அக்கறை கொள்ளாதிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டள்ளது.

"இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் இருண்டு காணப்படுகிறது. அவல நிலைக்கு உள்ளாகும் அனைவர் குறித்தும் தான் குரல் எழுப்புவேன் என நவநீதம்பிள்ளை பிபிசி தமிழோசை செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் சுதந்திர ஊடகவியலாளர்களே அதனால் நவநீதம்பிள்ளையின் ஆதரவுதலையீடு எமக்கு தேவை" என ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு செயற்குழு கோரியுள்ளது. (அ-2)

## சவுதி தொழிலமைச்சருடன் இலங்கை தூதுவர் சந்திப்பு

இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்திக்கும், சவுதி அரேபியாவின் தொழிலமைச்சர் அடேல் பாக்கி ஆகியவருக்குமிடையில் சந்திபொன்று இடம் பெற்றுள்ளது.

சவுதிஅரேபியாவில் பணிபுரியும் இலங்கையர்கள் தொடர்பில் இச்சந்திப்பின் போது கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வடிவேல் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபிய அரசாங்கத்தில் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு குறித்து அரேபிய செய்தி நிறுவனம் ஒன்றிற்கு கருத்து தெரிவித்துள்ள இலங்கை தூதுவர் இருநாட்டு உறவுகள் தொடர்பிலும் கருத்து பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாக கூறினார். (அ-2)

## பரிந்துரைகளுக்கு அமையவே புதிய அமைச்சு உருவாக்கம்

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய புதிய அமைச்சு உருவாக்கப் பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை ஆகியவற்றின் பொறுப்புக்கள் இந்த அமைச்சின் கீழ் நிர்வாகம் செய்யப்படவுள்ளன உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளை அரசாங்கம் கிரமமான முறையில் அமுல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதன் ஓர் கட்டமாகவே இந்த புதிய அமைச்சு உருவாக்கப்பட்டள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட காரணத்தினால் தான் பாதுகாப்பு கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்ய எம்மால் முடிந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக ஆட்சி நடாத்திய அரசாங்கங்கள் பொலிசாரை பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிர்வாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

### தூதரகங்களின் பாதுகாப்பு

## உத்தியோகத்தர்களுடன் இராணுவ தளபதி சந்திப்பு

இராணுவத் தளபதிக்கும் தூதரகங்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரட்நாயக்கவை முக்கியமான சில வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்ாலயங்களில் கடமையாற்றி வரும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சந்தித்துள்ளனர்.

அமெரிக்க, பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தூதரக மற்றும் உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்களே இவ்வாறு சந்தித்துள்ளனர்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் புதிய இராணுவத் தளபதிக்கு தங்களது வாழ்துச் செய்திகளை தெரிவித்துள்ளனர். நாடுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்தும் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்தும் இந்த சந்திப்புக்களின் போது கலந்துரையாடப்பட்டன. (அ-2)

## பிரதிப் பரீட்சை ஆணையாளர் ஓய்வு

இலங்கை பரீட்சை திணைக்களத்தில் பிரதி பரீட்சை ஆணையாளராக கடமையாற்றி வந்த ஏ.செலமன் கடந்த ஜீலை மாதம் 30ஆம் திகதியுடன் கடமையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் 1973 ஆம் ஆண்டு முதல் ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் அரச சேவையில் உயர் பதவிகளை வகித்து பின்னர் பிரதிப் பரீட்சை ஆணையாளராக இருந்து சேவை ஆற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார். (அ-9-29)

# முதலாம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்



அமரர்

## இளையதம்பி கந்தசாமி

(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்)

கனவுகள் சுமந்த கண்கள் கண்ணீரில் - வாடுதப்பா  
ஓராண்டோ ஓராயிரம் ஆண்டு சென்றாலும்  
ஓயாது எம் நெஞ்சில் - உம் நினைவுகள்  
ஆறாது எம் துயரம் - நீங்காது நெஞ்சைவிட்டு  
தேற்றுவார் யாருமில்லை தேடுகின்றோம் - உம்மையே  
வானுறையும் தெய்வமாயிருக்கும் - உங்கள்  
ஆத்மா சாந்தியடைய இருகரம் கூப்பி  
இறைவனை வேண்டுகின்றோம்



*இளையதம்பி கந்தசாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 26.08.2013 திங்கட்கிழமை அன்று அவரின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனை நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

மண்ணில்:  
30.12.1937

விண்ணில்:  
06.09.2012

குடும்பத்தினர்  
'தாய் இல்லம்'  
வள்ளாய், அச்சுவேலி.

(3674)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு உற்சவகாலத்தில் தினமும் மாலை 6.45 மணிமுதல் 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை திருமதி ஸ்ரீரஞ்சனி ரமணா வழங்கும் பாடலுடனான இசையரங்கம் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு அணிசெய் கலைஞர்களாக வயலின் கே. குகபரன், மிருதங்கம் பிரம்மஸ்ரீ வி.ரமணா, கெஞ்சிரா ஆர்.சிவராமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமய சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 3 மணி முதல், 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வாக சைவப்புலவர் கா.கமலநாதன் வழங்கும் திருமுறையும் வாழ்வு என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, ஏழாலை களவாவோடை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் நடைபெறும். மேலும் திருமதி மாணிக்கராஜசர்மா, அனந்தலட்சுமி ஆகியோரின் மாணவர்கள் வழங்கும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை, கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் என்பன மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று ஞாயிற்றுக் கிழமை சைவப்புலவர் கா.கமலநாதன் வழங்கும் கிரியை வழிபாடு என்னும் விடயப் பொருளிலான சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் பிரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச்சங்கமம் நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதன்படி இன்று கொழும்பு அரசினர் இசைக் கல்லூரி இசைக் கலைமாணி வைஷ்ணவி செயச்சந்திர வைரவ மூர்த்தி குருக்களின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா வழங்கும் பாரத வம்சம் பற்றிய இசைப் பேருரை பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை அரங்கேற்றம் என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ். சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றிவருகிறார். இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை உருவ வழிபாடு எனும் தொனிப் பொருளில் அவர் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

# மெட்ராஸ் கபே திரைப்படத்திற்கு எதிராக கனடாவில் ஆர்ப்பாட்டம்

(கனடா)

ரொரண்டோவில் மெட்ராஸ் கபே திரைப்படத்தை முற்றாக புறக்கணிக்கக் கோரி கனேடியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ரொரண்டோவில் நேற்றுமுன்தினம் மதியத்திலிருந்து மாலைவரை கனேடியத் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அன்றையதினம் மதியத்திலிருந்து திரைப்படங்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அரசின் சதியின் பின்புலத்தில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்டதாக கூறப்படும் மெட்ராஸ் கபே என்ற திரைப்படம் தமிழர்களை இழிபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

அந்த வகையில் தமிழகத்தில் இந்த திரைப்படம் திரையிடப்படுவதை தமிழகத்தில் உள்ள தமிழர்கள் வன்மையாகக் கண்டித்து, மாபெரும் மக்கள் எழுச்சி எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதனையடுத்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திரை அரங்குகளும் இப்படத்தை திரையிட மறுத்திருந்தன. இந்தியாவின் மற்றைய மாநிலங்களிலும் இப்போராட்டம் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

சனல்-4 மாதிரியான ஆதார பூர்வமான திரைப்படத்தை எதிர்கொள்ள முடியாத இலங்கை அரசு, இப்படியான புனை கதைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும்திரைப்படத்தை மூன்று மொழிகளில் திரையிட்டு மக்களின் மனதில் இராணுவத்தை மேலாகவும், தமிழ் மக்களுக்காக போராடிய போராளிகளையும்போராட்டத்தையும் இழிவு படுத்தவும் முயற்சிக்கின்றது என அவர்கள் இதன் போது கூறினர்.

ஈழத்தமிழர்களது நீதிக்கான நியாயமான விடுதலைப் போராட்டம், தமிழகத் தமிழர்களையும் உலகத் தமிழ் மக்களையும் வேற்று இனத்தவர்களையும் தன்பால் ஈர்த்து அணி சேர்த்து வலுவடைந்து வரும் நிலையில் இந்த உணர்வை சிதைத்து எம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பால் தமிழருக்கு உள்ள நம்பகத் தன்மையையும் பற்றுறுதியையும் முறியடிக்கும் நோக்கோடு திட்டமிட்டு களமிறக்கப்பட்டுள்ளது இத் திரைப்படம் என அவர்கள் கூறினர். (அ-2)

# அநுராதபுரத்தில் கடதாசி உற்பத்தி தொழிற்சாலை

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்தில் கடதாசி உற்பத்தி தொழிற்சாலையொன்றை அமைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

வட மத்திய மாகாணத்திலுள்ள விவசாய நிலங்களிலிருந்து பெறப்படும் வைக்கோலை மூலப் பொருளாக பயன்படுத்தும் வகையிலேயே இந்த கடதாசி தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

மாகாணத்தில் அதிகளவிலான வைக்கோல்கள் வீணாக எரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இத்னைக் கருத்திற் கொண்டு அநுராதபுரத்தை கேந்திர நிலையமாகக் கருதி புதிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும், பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதனூடாக அநேகமானோருக்கு மேலதிக வருமானமும் தொழில் வாய்ப்பும் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கையில் ஐ.நா.ம.உரிமை காரியாலயம்?


(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் காரியாலயத்தின் கிளையொன்றை இலங்கையில் அமைக்க சில தரப்பினர் முயற்சிகள் மேற்கொள்வதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கிளைக் காரியாலயமாக இந்த நிறுவனம் இயங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இவ்வாறான ஓர் காரியாலயத்தை அமைக்கும் யோசனை திட்டத்தை முற்றுமுழுதாக அரசாங்கம் நிராகரித்துள்ளதாகவும் அவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு பதினான்காம் திருவிழா



## முருகனோடு பேசுவோம்



மயில் ஏறி விளையாடும்
முருகனோடு பேச வேண்டும்
மக்கள் குறை நீக்கிடும்
குமரனோடு வாழ வேண்டும்

சூரனை போரில் வென்றவன்
நெறியிலே நடக்க வேண்டும்
வள்ளியின் காதலில் மகிழ்ந்தவன்
வார்ப்பிலே வணங்க வேண்டும்

நந்திக் கொடி பறக்கும்
நல்லையிலே சிரிக்க வேண்டும்
நான்காம் தமிழ் விழிக்கும்
மண்ணிலே சிந்திக்க வேண்டும்

நல்லை அமிழ்தன்.

## ஞாலத்தில் ஓங்கச் செய்

திருப்புகழாற் புகழ்பாடி யடிபணிந்த பக்தன்
அருணகிரிக் கருளாசி ஈய்ந்திட - முருகா
காலமெலாங் கண்ணொழுகிக் கரங்கூப்பு மெங்களை
ஞாலமதி லோங்கச் செய்

கலை ஒளி மயில் வேலாயுத பிள்ளை,
புளியம்பொக்கணை.

## குருவாய் வந்தால் ஆகாதோ குமரா நல்லைப் பெருமானே



அருளால் உலகைத்தாங்கிவரும்
அப்பன் மகிழ்ப் பிரணவத்தை
குருவாய் வந்து அருள் புரிந்த குகனே
முந்தைக் கொடியவினை
இருளில் கிடந்து கரை காணா
தேங்கும் அபலை உய்ய வரும்
குருவாய் வந்தால் ஆகாதோ
குமரா நல்லைப் பெருமானே

வியாகுலம் பிரான்சீஸ், ஊர்காவற்றுறை.

## வினை தீரும் நாள் வருமோ?



கோல மயில் வாகனனே - எம்
குறை தீர்க்கும் வேலவனே
அடியார்க்கு அனுதினமும்
ஆனந்தவாழ்வதனை
அள்ளிக் கொடுப்பவனே
வெடியோசை தீர்ந்தும்
விடியல் எம்மைத் தேடவில்லை
குடிகெடுக்கும் மதுவரக்கன்
கொடி கட்டிப் பறப்பதும்
போதைப் பொடியுடன்
புற்று நோய்ப்புகையும்
சங்கமமாகியிங்கு -எம்
சந்ததி அழிவதும்
புகழ்பூத்த கோலமெல்லாம்
இங்கு குற்றுயிராய்க் கிடப்பதும்
யாழின் குரல்கொடுத்து
வாழும் வழி கண்டோர்
வழிமாறி வாழ்வதும்
நாளாந்த நிகழ்வாகி
நாறுதையாவாழ்வு
வினைதீர்க்கும் வேலவனே-எம்
வினை தீரும் நாள் வருமோ?

நடராசா சந்திரலிங்கம், அச்சுவேலி.

## நல்லூர் கந்தன் அநுபூதி

அல்லற் படுவென் றெனையிவ் வுலகில்
தொல்லைப் படவிட் டனையே தகுமோ?
கல்லைக் கனியாக் கிடுவேல் முருகா
சொல்லற் கினியோ னேநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கு வீதிகளை புனரமைத்து தாருங்கள்

(கரணவாய்)

பருத்தித்துறை 750 வழித்தட பிரதான வீதி காப்பெற் இடப்பட்டுள்ள நிலையில் ஏனைய குறுக்கு வீதிகள் புனரமைக்கப்படாமையால் போக்குவரத்துச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வல்லை.முற்சந்தி குஞ்சர் கடை விழுத்தாலடி, நாவலர் மட சோதி வீதி, இமையாணன் வீதி, கரணவாய் தெற்கு குறுக்கு வீதிகள் ஆகியன புனரமைப்புச் செய்யப் படாதுள்ளன.

இதனால் 750 வழித்தட பிரதான வீதிக்கு செல்லும் வாகனங்கள், காப்பெற் வீதி, குறுக்கு வீதிகளை விடவும் உயரமாக காணப்படுவதினால் விபத்துக்குள்ளாவதுடன் போக்குவரத்துச் செய்வதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே, குறுக்கு வீதிகளையும் புனரமைக்க பிரதேச சபையினர் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-60)







நன்றி:- மிரர்

# வாக்களிக்கும் முறை தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்

## பொலிஸ் அத்தியட்சகர் பத்திநாயக்க வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**தேர்தலில் வாக்களிக்கும் முறை தொடர்பில் வாக்காளர்களுக்கு தேர்தல் திணைக்களம் விள்க்க மளிக்க வேண்டும் என காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.எஸ். பத்திநாயக்க தெரிவித்தார்.**

நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பில் வாக்காளர்களுக்கு பொலிஸ் பொதுநோக்கு திட்டங்களில் விளக்கமளிக்க முடியுமா? என கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் பொதுமக்கள் எவ்வாறு வாக்களிப்பது என்பது விளக்கமளிக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் செல்லுபடியற்ற வாக்களிப்புக்கள் அனைத்து தேர்தல்களிலும் இடம்பெற்றுள்ளன என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியது அவசியமானது.எனினும் பொலிஸாரால் அத் தெளிவு படுத்தல் நடவடிக்கையை மேற்கொள்ளமுடியாது.

அதனை தேர்தல் திணைக்களத்தினரே செய்யவேண்டும்.

அந்தவகையில் தேர்தல் திணைக்களத்தோடு இணைந்து பொலிஸாரும் வாக்களிப்பு தொடர்பான தெளிவுபடுத்தலை மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக இவ் வாக்களிப்பு தெளிவு படுத்தலை ஒரு பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளமுடியும்.

பொதுவான ஒரு தேர்தல் சின்னத்தை தெரிவுசெய்து அதற்கு எவ்வாறு வாக்களிப்பது என்பதை செயன்முறை ரீதியாக விளக் கமளிப்பதன் மூலம் அதனை அவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

வாக்காளர்களால் இடப்படுகின்ற வாக்குகள் ஒவ்வொன்றும் வீணாகாதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.(அ-4)

## வாக்காளார் விபரங்களை அறிய அழுத்துங்கள் 1919

(தும்பளை)

வடக்கு மத்திய வடமேல் மாகாணங்களிலுள்ள வாக்காளர்களில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நிலையில் வாக்களிக்க அனுமதி கிடைக்காதவர்கள் மற்றும் வாக்களிக்கத் தகுதியிருந்தும் வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் 1919 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என இராஜகிரிய தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

அத்தோடு அரசாங்கத்திலிருந்து பெறப்படும் சேவைகள் பற்றிய சகல விபரங்களையும் மேற்படி இலக்கத்துடன் தொடர்புகொள்வதனூடாக அரசாங்க தகவல் மையத்தை அனுகமுடியும்.

இவ் விடயங்கள் அடங்கிய பதாதைகள் பாடசாலைகள், கிராம அலுவலர் பணிமனைகள், பிரதேச செயலகங்கள் போன்ற இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (அ-9-19)

# உற்பத்தி கண்காட்சியில் இணைந்து கொள்ளலாம்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தி யாலயத்தில் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இக்கண்காட்சியில் இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்புநிலையம் ஆகிய நிறுவனங்களின் கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது பொருட்களை கண்காட்சிக்கும் விற்பனைக்குமாக காட்சிப் படுத்தியுள்ளனர்.

இக்கண்காட்சியிலும் விற்பனைச் சந்தையிலும் கலந்து கொண்டு தரமான பொருட் களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்பட் டுள்ளது.

இக்கண்காட்சி விற்பனையில் புதிதாக இணைந்து கொள்ள விரும்புவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கப்படும்.

இவ் விடயம் தொடர்பான மேலதிக விபரங்களிற்கு 021-222 2421 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ்.கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிர திப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (அ)


# நடமாடும் சேவையில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்துள்ளதாக பிரதேச செயலர் எஸ். சிவசிறி தெரிவித்துள்ளார்.

இந் நடமாடும் சேவையில் பெரும் பாலானோர் தேசிய அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களாக காணப்பட்டனர்.

அடையாள அட்டை பெறுவதற்கான உறுபதிப் பத்திரங்களை நெல்லியடிப் பொறுப் பதிகாரி அவர்களுக்கு வழங்கி சமாதான நீதவான்களான எம்.பரமானந்தம், கே.குணசிங்கம் ஆகியோரின் கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டன.



இந் நடமாடும் சேவையில் பங்கு பற்றியவர்களுக்கான தேசிய அடையாள அட்டை உட்பட ஏனைய ஆவணங்கள் இரு வாரங்களில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளன. (அ-9-60)







சிவத்தமிழ் வித்தகர், சிவ.மகாலிங்கம் எழுதிய **தவமுனிவனின் தமிழ் மந்திரம்** எனும் நூல் வெளியீட்டு விழா யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பிரதம விருந்தினர் ச.விநாயக மூர்த்தியிடமிருந்து திருமதி பரமேஸ்வரி சுப்பிரணியம் சார்பாக மன்மதராஜன் முதற் பிரதியைப் பெற்று கொள்வதையும் விழாவில் கலந்து கொண்ட விருத்தினர்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் முடிந்தபோது சிரிப்பாள்.
ஆனால் நினைத்தபோது அழுவாள்.
-பிரெஞ்சுப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதம்மா!

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக தென்பகுதி கருதிக் கொள்கிறது.

அதன் காரணமாக நவநீதம்பிள்ளையின் வருகை குறித்து பல்வேறு கருத்துக்களை முன்வைப்பதில் தென்பகுதி அரசியல்வாதிகள் முண்டியடித்த வண்ணம் இருந்தனர்.

எதிர்ப்புக்கள், விமர்சனங்களுக்கு மத்தியில் இலங்கைக்கு வருகின்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் விஜயம் குறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கான பதில் மௌனமாகவே இருக்கும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் வன்னிப் போர் முடிவுற்றதிலிருந்து, ஐ.நா சபையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்த வண்ணமே உள்ளனர்.

இதனிடையே ஜெனிவாவில் இருதடவைகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இருந்தும் எந்தப் பிரயோசனமும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

தமிழ்மக்கள் எதிர்பார்த்த உரிமைகள், தீர்வுகள், அபிலாசைகள் என அனைத்தும் தவிடுபொடியாகிப்போக வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் மட்டும் சர்வதேசத்தின் கடும் அழுத்தங்களின் மத்தியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏதோ எதிர்பார்க்க ஏதோ கிடைத்தது என்பதைத் தவிர வேறெதனையும் கூற முடியாத அளவில் ஈழத் தமிழ் மக்கள் துன்பத்தின் உச்சத்துக்கு சென்றுள்ளனர்.

அண்டை நாடான இந்தியா மீதான நம்பிக்கை வீண்போய், சர்வதேசம் என்ற நம்பிக்கைகளும் காலாவதியாகி நிற்கின்ற இந்த வேளையில், ஐ.நா சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகையால் நாம் எதனை எதிர்பார்க்க முடியும்?

தனிநாடு கிடைக்கும் என்பதற்காக எத்தனையோ இழப்புக்களையும் எத்தனையோ நெருக்கடிகளையும் தாங்கிய தமிழ் மக்களுக்கு அவரின் வருகை எந்தவித ஆறுதலையும் தரப்போவதில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஏனெனில் இன்றுவரை தமிழ் மக்களின் வாழ்விடங்களை படையினர் தம்வசம் வைத்திருப்பதும் யுத்தத்தால் அனைத்தையும் இழந்த மக்கள் குடியிருக்க வழியின்றி – வாழ்வதற்கு வசதியின்றி வாடுகின்ற துன்பம் தொடர்கின்ற நிலையில், நவநீதம்பிள்ளை மட்டுமல்ல; அந்த சாட்சாத் ஈஸ்வரன் நேரில் வந்தாலும் அதுபற்றி பொருட்படுத்தும் மனநிலையில் தமிழ் மக்கள் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை.


இத்தகைய மனநிலை என்பது இந்த நாட்டின் ஆளும் வர்க்கம் கொட்டித் தீர்த்த கொடுமையின் வெளிப்பாடு மட்டுமல்ல,

ஐ.நா போன்ற உலக அமைப்புக்கள் உரிய நேரத்தில் தமிழ் மக்களை காப்பாற்றத் தவறிய தன் தாங்கொணா வேதனையும் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ளுதல் மிகவும் முக்கியமானது.

இந்த புரிதல் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டால் மட்டுமே நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் அர்த்தமுடையதாக அமையும்.

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எல்லாரும் வாழியடா



ஒரு பொல்லாப்பு மில்லையடா–தம்பி
உண்மை முழுவதும் அறிந்திடடா
வருவதைக் கண்டு மகிழாதே–தம்பி
வஞ்சகப் பேச்சைத் தழுவாதே

கருமத் தைக்கை நெகிழாதே–தம்பி
கவலை கொண்டு கலங்காதே
தரும நெறியில் வழுவாதே–தம்பி
தன்னை யறிய எழுவாயே

# நளினி–முருகன் 30 நிமிடம் சந்திப்பு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி - முருகன் ஆகியோர் நேற்றுச் சந்தித்து பேசிக் கொண்டனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முருகனின் மனைவியான நளினி வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



அதே வழக்கில் கைது செய்யப்பட்ட நளினியின் கணவர் முருகன் தூக்கு தண்டனை கைதியாக ஆண்கள் சிறையில் உள்ளார்.

15 நாட்களுக்கு ஒருமுறை இருவரின சந்திப்பு நடக்கும். இந்த நிலையில் நேற்றுக் காலை பெண்கள் சிறையில் நளினி–முருகன் சந்திப்பு நடந்தது.

இதற்காக பலத்த பாதுகாப்புடன் ஆண்கள் சிறையில் இருந்து முருகன் பெண்கள் சிறைக்கு அழைத்து செல்லபபட்டார். இருவரும் சுமார் 30 நிமிடம் சந்தித்து பேசினர்.

இதனை முன்னிட்டு சிறைச்சாலை அருகே பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. (எ-11)

# தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம் வண்ணை பிறவுண் வீதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவத்தின் 11ஆம் நாளான இன்று காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (எ-11)

# சைக்கிள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் நகரப் பகுதியில் வீதியில் போடப்பட்டிருந்த உரிமை கோரப்படாத லுமாலா துவிச்சக்கர வண்டி தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த துவிச்சக்கர வண்டியை எவரும் உரிமை கோரப்படாதவிடத்து வண்டி ஏலத்தில் விடப்படும் என சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (எ)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

24.08.2013க்கான **வினாவும் விடையும்:-**

**வினா:-** நாம் ஏன் சைவ உணவு உண்ண வேண்டும்?

**விடை:** உயிர்களைக் கொலை செய்யும் உரிமை நமக்குக் கிடையாது.
உடலுக்கு தேவையான அனைத்துப் போசாக்குகளும் சைவ உணவில் தாராளமாகக் கிடைக்கின்றன.
உடலிலுள்ள கொலஸ்ரோலைக் குறைக்கக் கூடிய தன்மை தாவர உணவுகளில் உண்டு.
மாமிசஉணவுகளில்தீங்குவிளைவிக்கும்கொழுப்புஅதிகம்உண்டு.

25.08.2013 வினா- இந்து தர்மத்தில் வாழ்க்கையின் நான்கு நிலைகளும் எவை?
விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு ( நேரம் மாற்றப்பட்டுள்ளது). இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்**

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

# இயேசுவுக்காக துன்பங்களை ஏற்று அதற்கான வழியினை ஆயத்தப்படுத்துவோம்

இன்று தமக்குத் தரப்படும் வேதாகமப் பகுதியில் இயேசு எருசலேம் நோக்கிப் பயணம் செய்கிறார். அப்போது ஒருவர், மீட்புப் பெறுவோர் சிலர் மட்டும் தானா? என்று இயேசுவிடம் கேட்டார்.

அதற்கு அவர்களிடம்: இடுக்கமான வாயில் வழியாக நுழைய வருந்தி முயலுங்கள், இறையாட்சியின்போது கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்து மக்கள் வந்து பந்தியில் அமர்வார்கள். ஆம், கடைசியானோர் முதன்மையாவர் முதன்மையானோர

## பரமபிதா காட்டிய பாதை

கடைசியாவர். என்று இயேசு கூறுகின்றார்.

இங்கு நாம் முன்பு படித்ததில் பிடித்த ஒரு கதையை பகிர்வது சாலப்பொருத்தம் என எண்ணுகின்றேன்:

கடவுளின் குணங்களை விளக்கக் கூறப்பட்ட கதை இது.

'கடவுள் விண்ணகத்தில் தன் மாமன்றத்திற்கு வந்தார். மாமன்றம் மக்களால் நிறைந்து வழிந்தது. கூட்டம் அலைமோதியது. உலகில் இருந்த அனைவரும் அங்கிருந்ததைப் போல் இருந்தது. அந்தக் கூட்டத்தைக் கண்ட இறைவன், வானதூதரிடம் பத்துக் கட்டளைகள் அடங்கிய பலகையை எடுத்து வரச் சொன்னார். -இந்த பத்துக் கட்டளைகள் மக்களின் மண்ணக வாழ்விற்கு தேவையான அடிப்படை 10 விதிமுறைகளை கொண்டது - வானதூதர் அவற்றைக் கொண்டு வந்தார்.

அந்தக் கட்டளைகளை ஒவ்வொன்றாக வாசிக்கச் சொன்னார். 'நானே உன் கடவுளாகிய ஆண்டவர்... என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" என்ற முதல் கட்டளையை வானதூதர் வாசித்தார்.

அந்தக் கட்டளையை மீறியவர்கள் மாமன்றத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. பலர் வெளியேற வேண்டியிருந்தது. இப்படி ஒவ்வொரு கட்டளையும் வாசிக்கப்பட்டது. அந்தக் கட்டளையை மீறிய மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இறுதி கட்டளை வருவதற்குள், மாமன்றம் ஏறத்தாழ காலியாகி விட்டது. ஒரு சிலர் மட்டும் ஆங்காங்கே நின்று செபித்துக் கொண்டிருந்தனர். கடவுள் அந்த மாமன்றத்திற்குள் வந்தபோது இருந்த அந்த கட்டுக்கடங்காத கூட்டம், அங்கு ஒலித்த ஆரவாரம் இவற்றிற்கும், இப்போது ஒரு சிலரே நின்று செபித்துக் கொண்டிருந்த இந்த அமைதிக்கும் இருந்த வேறுபாடு கடவுளை ஆழ்ந்த சிந்தனையில் மூழ்க வைத்தது. பின்னர் ஏதோ ஒரு தீர்மானத்தோடு, கடவுள் வானதூதரிடம் திரும்பி, வெளியில் அனுப்பப்பட்ட அனைவரையும் உள்ளே வரச் சொல் என்றார். மீண்டும் மாமன்றம் நிறைந்தது. மகிழ்ச்சி ஆரவாரம் எழுந்தது. கடவுளும் மகிழ்ந்தார்.

இது ஒரு கற்பனைக் கதையானாலும் கடவுளை இப்படி இரக்கம் நிறைந்தவர் என நினைத்துப் பார்க்கலாம். உண்மையில் நம் கடவுள் இப்படி நடந்து கொள்வாரா? 'ஆம்' என்று உடனடியாகப் பதில் சொல்ல நம்மில் பலருக்குத் தயக்கம் இருக்கும்.

அனைவரையும் கூட்டிச் சேர்க்கும், அனைவரையும் அன்புடன் அழைத்து, அணைத்து விருந்து கொடுக்கும் கடவுள்தான் நம் கடவுள். இன்று நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேதாகமப் பகுதி தரும் செய்தி இதுதான்.



பாவிகள், புண்ணியவான்கள் எல்லோருக்கும் மீட்பு உண்டு. இறையரசில அவர்கள் இருவருக்கும் எந்த வேறுபாடும் இருக்காது என்பது மனித, உலக அளவுகோல்களை உடைத்தெறியும்

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

ஒரு சவால். சவாலை ஏற்று சற்று சிந்தித்துப் பார்ப்போம். அகன்ற வாயில் வழியாக நுழைய எம்மைப் பலர் அழைத்தபோது நாம் அதைப் புறக்கணித்து குறுகலான, இடுக்கமான வாயில் வழியாக நுழைந்தோமா? முன்னைய வாயில கடைசியானோரின் வாயில். பின்னைய வாயில் முதன்மையானோரின் வாயில்.

'நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று எம்மால் சொல்ல இயல வேண்டும் என்றால் இடுக்கமான வாயிலில் நுழைந்து இயேசுவுக்காகத் துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். வழியை நாம்தான் தேர்ந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் வெற்றியில் அனைத்து மூத்த வீரர்களுக்கும் பங்குள்ளது என்கிறார் யுவராஜ்



இந்திய அணியின் வெற்றியில் அனைத்து மூத்த வீரர்களுக்கும் பங்குள்ளது. இதை எளிதாக மறந்து விடக் கூடாது என, கூறியுள்ளார் யுவராஜ் சிங்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் யுவராஜ் சிங், 2011இல் நடைபெற்ற உலக கிண்ணப் போட்டியில், தொடர் நாயகன் விருது வென்றார். இதன்பின் ஏற்பட்ட நுரையீரல் புற்றுநோயில் இருந்து மீண்ட இவர், 2012 'ரி-20 உலக கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம்பெற்றார். தற்போது அணியில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

இருப்பினும், 2015 உலக கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் இடம்பெறவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார். இதற்காக, பிரான்ஸ்சென்று புகழ்பெற்ற டிம் எக்செட்டரிடம் பயிற்சி எடுத்து திரும்பியுள்ளார்.

இதுபற்றி யுவராஜ் கூறுகையில்,

அணியில் நான் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்தியா திறமையான 'லெவன்' அணியை தேர்ந்தெடுக்கும். அதேநேரம், இதில் இளமை மற்றும் அனுபவம் கலந்திருக்கும் என நம்புகிறேன்.


இந்த தேர்வின்போது, வீரர்களின் முந்தைய அசத்தல்கள்ள கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் ஒருபோதும் கூறப் போவது இல்லை. ஆனால், கடந்த காலத்தில் இந்த வீரர்கள் பெற்றுத் தந்த வெற்றி மற்றும் தேசததுக்காக என்ன சாதித்தனர் என்பதை மறந்து விடக்கூடாது.

சமீபத்தில் இளம் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துகின்றனர். தவிர, இந்திய அணி சம்பியன்ஸ் கிண்ணம், சிம்பாப்வே தொடரில் அசத்தியது மகிழ்ச்சி தருகிறது. இது இந்திய கிரிக்கெட்டுக்கு நல்ல சகுனம் தான்.

அடுத்த உலக கிண்ணம் (2015) தொடருக்கு இன்னும், ஒன்றரை ஆண்டுகள் உள்ளன. அதற்குள் இந்திய அணியில் இடம்பெற முயற்சிப்பேன்.

இதற்காக கடுமையான பயிற்சியில் ஈடுபட்டுள்ளேன். அண்மையில பிரான்ஸ் சென்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டேன். இதன் மூலம் நல்ல உடற்தகுதியை பெற்றுள்ளேன். என்னுடன் வந்த சகிர்கான், உடல எடையில் 6 கிலோ குறைத்துள்ளார்.

என்றார் இந்திய நட்சத்திர வீரர் யுவராஜ் சிங்.



# இந்திய மல்யுத்த வீரருக்கு விரிக்கப்பட்ட சூதாட்ட வலை

உலக சம்பியன்ஷிப் மல்யுத்த இறுதிப் போட்டியில் தோற்க, தனக்கு ரூ. 4 கோடி (இந்திய பணம்) வரை கொடுக்க முன்வந்தனர். இதுகுறித்து அப்போது கூறுகையில், யாரும் கண்டுகொள்ளவில்லை, என, மல்யுத்த வீரர் சுஷில் குமார் தெரிவித்தார். இதுகுறித்து சுஷில் குமார் கூறுகையில்,

உலக மல்யுத்தப் போட்டி 2010இல் ரஷ்யாவில் நடைபெற்றது. இந்த போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு இந்திய வீரரான நான் முன்னேறுவேன் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ரஷ்யாவின் ஆலன் கோகயேவை சந்திக்க தயாராகி கொண்டிருந்தேன்.

அப்போது வெளிநாட்டு பயிற்சியாளர்களில் ஒருவர் வந்து, ரஷ்ய அணியை சேர்ந்தவர்கள் என்னுடன் பேச விரும்புவதாக தெரிவித்தார். அதாவது, இறுதி ஆட்டத்தில் நான் தோற்கவேண்டும். போட்டி ரஷ்யாவில் நடப்பதால், அவர்கள் வெற்றி பெற விரும்பு கின்றனர் என்றார். இதற்காக, ரூ. 4 கோடி வரை தர இருப்பதாக கூறினர். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். ஏனெனில், ஒரு மல்யுத்த வீரருக்கு இந்த தொகை பெரியது. ஆனால், சூதாட்டம் என்பது எனக்கு முன்பின் அறிந்திராத ஒன்று. தவிர, ரூ. 2 அல்லது 4 கோடி என்பது ஒரு பொருட்டல்ல. இங்கு பெருமைதான் முக்கியம.

இதனால், எப்படியும் இறுதியில் வெற்றி பெறவேண்டும் எனத் திட்டமிட்டு, அதற்கேற்ப செயல்பட்டேன். கடைசியில் 3-1 என்ற புள்ளிக்கணக்கில வெற்றி பெற்று தங்கம் வென்றேன். இந்த சம்பவம் குறித்து அப்போதே தெரிவித்தேன். ஆனால், யாரும் கண்டுகொள்ளவில்லை. என்றார் சுஷில் குமார்.

இந்தியா சார்பாக மல்யுத்த வீரர் சுஷில்குமார் போட்டிகளில் பங்குபற்றி, பீஜிங் (2008) ஒலிம்பிக்கில் வெண்கலம், லண்டன் (2012) ஒலிம்பிக்கில் வெள்ளி, 2010இல் மாஸ்கோவில் சம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் ஆகிய பதக்கங்களை பெற்றிருக்கிறார்.

# ஆஸி. கிரிக்கெட் சபை மீது ஹைடன் பாய்ச்சல்



இங்கிலாந்துக்கு எதிரான 5 டெஸ்ட் கொண்ட ஆசஷ் தொடரில் 3 டெஸ்டில் தோற்று தொடரை இழந்தது அவுஸ்திரேலிய அணி. 5ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் லண்டனில் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையை அந்நாட்டு முன்னாள் வீரர் மேத்யூ ஹைடன் கடுமையாக சாடியுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

அவுஸ்திரேலிய அணியின் தற்போதைய மோசமான நிலைக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையே காரணம். மோசமான தலைமை தான் அவுஸ்திரேலியாவுக்கு பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது. அவுஸ்திரேலிய அணிக்கு சிறந்த வலுவான தலைமையை உருவாக்க அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தவறிவிட்டது. இதற்கு திறமையின்மையே காரணம். மைக்கல் கிளார்க்கை அணித் தலைவராக்கியது மிகப் பெரிய தவறாகும். நான் விளையாடிய கால கட்டங்களில் சிறந்த தலைமையின் காரணமாகவே அவுஸ்திரேலிய அணி மேம்பட்டது.

இந்திய சுற்றுப்பயணத்தின்போது வீரர்கள் இடையே ஏற்பட்ட மோதலுக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தவறான செயற்பாடுகள்தான் காரணம்.

இவ்வாறு கூறினார் ஆஸி. அணியின் முன்னாள் அதிரடி வீரர் மத்யூ ஹைடன்

# சுப்பர் கிண்ணக் காற்பந்து தொடரின் பார்சிலோனா - அத்லெட்டிகோ மாட்ரிட் அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில்



பார்சிலோனா, அத்லெட்டிகோ மாட்ரிட் அணிகள் மோதிய 'சுப்பர்' கிண்ணக் காற்பந்து தொடரின் முதல் போட்டி சமநிலையானது.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில், லா லிகா தொடரில் 'சுப்பர்' கிண்ணக் காற்பந்து போட்டி நடைபெற்று வருகிறது. இதில நடப்பு சம்பியன் பார்சிலோனா, அத்லெட்டிகோ மாட்ரிட் அணிகள் மோதின.

முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்திய அத்லெட்டிகோ மாட்ரிட் அணியின் டேவிட் வில்லா (12ஆவது நிமிடம்) முதல் கோல் அடித்தார். இடையில், பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி, காயம் காரணமாக வெளியேறினார். இரண்டாவது பாதியில், பார்சிலோனா அணியில் சமீபத்தில் இணைந்த பிரேசிலின் நெய்மர் (66ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். முடிவில், போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இரண்டாவது போட்டி ஓக. 28இல் பார்சிலோனாவில் நடைபெறவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரிக்கும்.

# டெனிஸ் இறுதி ஆட்டத்துக்கு கிவிட்டோவா

நியூஹேவன் டெனிஸ் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா முன்னேறினார்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் நியூஹேவன் டெனிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, சக வீராங்கனை கிளாரா ஜகோபலோவை எதிர் கொண்டார். இதில் முதல் செற்றை 6-0 என எளிதாக கைப்பற்றிய கிவிட்டோவா, இரண்டாவது செற்றையும் 6-1 என தன்வசப்படுத்தி இறுதிக்குள் நுழைந்தார்.


YAMAHA

விசேட விலைக்கழிவு

நீங்கள் விரும்பும் YAMAHA
மோட்டார் சைக்கிள் இப்போது
புதிய வர்ணங்களிலும்
புதிய விலைகளிலும்





| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| Ray | 215,000.00 | 211,000.00 |
| SZ-X | 316,000.00 | 278,000.00 |
| SZ-R | 326,000.00 | 298,000.00 |
| FZ-16 | 375,000.00 | 335,000.00 |
| FZ-S | 399,000.00 | 347,000.00 |
| Fazer | 436,900.00 | 393,000.00 |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்

A.M.W. (Pvt) Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0776623824/ 2224040

குஞ்சர் கடைச் சந்தி, நெல்லியடி. 0779893343


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிற்கு செவ்வாயன்று...

ஆணையாளர் நவநீதம்பிள்ளை இன்று இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

இன்று மாலை இலங்கை வரும அவர் இன்று எந்தவொரு உத்தியோகபூர்வ சந்திப்புகளிலும் ஈடுபட மாட்டார்.

- நாளை திங்கட்கிழமை நிகழ்ச்சி நிரலின்படி மூன்று சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.

அதில் முதலாவதாக பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸை சந்தித்ததன் பின்னர், அடுத்ததாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் உடனும் அதற்கடுத்ததாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரான வாசுதேவ நாணயக்காரவுடனும் சந்திப்புக்கள் இடம்பெறவிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை வடக்கிற்கு விஜயம் செய்யவிருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும் தற்போது நிகழ்ச்சி நிரலின் மாற்றத்திற்கமைய மறுநாள் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமையே அவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார்.

இங்கு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரை சந்தித்ததன் பின்னர் அன்று மாலை குடாநாட்டின் மீள்குடியேற்ற பகுதிகளுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை ஆராயவுள்ளார்.

அதன் பின்னர் கிளிநொச்சி செல்லும் அவர் அங்கு மீள்குடியேற்ற நிலைமைகளை அவதானிக்க இருப்பதுடன் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

மறுநாள் 28ஆம் திகதி புதன்கிழமை திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் நவநீதம்பிள்ளை, அங்கு அரச அதிகாரிகளுடனான சந்திப்புக்களில் கலந்து கொள்வதுடன் மேலும் பல விடயங்களை ஆராய்வார்.

வியாழக்கிழமை காலை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

இதன் பின்னர் வெள்ளிக்கிழமை நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் முதலாவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திக்கவுள்ள நவநீதம்பிள்ளை, அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் அதனையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்ததன் பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இதனையடுத்து இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு இடம்பெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர்களுடனான சந்திப்புக்கள் மற்றும் வடக்கின் நிலைமைகள் ஆராய்வுகள் என அவரது நிகழ்ச்சி நிரல் நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவடைந்ததன் பின்னர் இறுதியாக எதிர்வரும் சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஊடகவியலாளர்களை சந்திக்கவுள்ள ஐ.நா.உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை, அன்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்வார். (எ-11)

# புதிய அமைச்சின்...

கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாகவே இந்த அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும், பாதுகாப்பு அமைச்சின் ஆதிக்கத்தில் இருந்து பொலிஸ் துறையை விடுவித்து, சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

பாதுகப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பொலிஸ் துறையை சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று உண்மைகளைக கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவும், உள்ளூர் மனித வுரிமை அமைப்புகளும் வலியுறுத்தியிருந்தன. அத்துடன், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என அரசுக்கு ஐ.நா மனிதவுரிமைகள ஆணைக்குழுவும், மேற்கத்தேய நாடுகளும் வலியுறுத்தியிருந்தன.

அதேபோன்று பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில கடந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான இரு தீர்மானங்களும் இதனை வலியுறுத்தியிருந்தன.

ஆயினும் பாதுகாப்பு அமைச்சில் இருந்து பொலிஸ் துறையை தனியாக விடுவிக்க முடியாது எனவும், அது பாதுகாப்பு அமைச்சின கீழேயே தொடர்ந்து செயற்படும் என்றும் அரசாங்கம் இதுவரை கூறிவந்திருந்த நிலையில், இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு 2 நாட்கள் முன்னதாக, கடந்த 16ஆம் திகதி வெளியிப்பட்டப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் இந்த புதிய அமைச்சை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஊடகவிய...

வீட்டுக்குள் நுழைந்த குற்றக் கும்பல் ஒன்று அவரது நெஞ்சிலும் கழுத்திலும் கத்திகளை வைத்தபடி, வீட்டிலுள்ள அல்மாரிகளை உடைத்து தேடுதல் நடத்தியுள்ளது.

"இது எங்களுக்கு கிடைத்துள்ள ஒரு கான்ட்ராக்ட்- ஒப்பந்தம் என்று அவர்கள் கூறினார்கள். உங்களோடு பிரச்சினையில் உள்ள ஒருவர்தான் இந்த வேலையை எங்களிடம் தந்துள்ளார் என்றும் கூறினார்கள்" என்று பிபிசியிடம் கூறினார் மந்தனா இஸ்மாயில்.

மந்தனா இஸ்மாயிலின் கணவர் ரொமேஷ் அபேவிக்கிரமவும் ஓர் ஊடகவியலாளர்.

வேலைமுடிந்து அதிகாலையில் வீடுதிரும்பிய மந்தனாவின் கணவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து, அவர் பொலிஸ் அவசர தொலைபேசி அழைப்பு விடுத்துள்ளார்.

உடனடியாக விரைந்துவந்த பொலிஸாருடன் அந்தக் குற்றக் கும்பலுக்கு மோதல் ஏற்பட்டுள்ளது.

கொள்ளையடிக்க வந்தவர்களுடன் ஏற்பட்ட மோதலில் சுய பாதுகாப்புக்காக பொலிஸார் நடத்திய தாக்குதலில் ஒரு கொள்ளையர் உயிரிழந்துள்ளார். நான்கு பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்ட நிலையில் நான்கு பொலிஸாரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றார் பொலிஸ பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன.

"இவர்கள் நிச்சயமாக கொள்ளையடிக்கும் நோக்குடன்தான் வந்திருக்கிறார்கள். அவரது ஊடகத தொழிலுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றுதான் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது"என்றார் புத்திக சிறிவர்தன.

ஆனால் தமது வீட்டுக்குள் வந்தவர்கள் கொள்ளையர்களாக மட்டும் இருக்க வாய்ப்பில்லை என்று ஊடகவியலாளர் மந்தனா பிபிசியிடம் கூறினார்.

கடந்த வியாழன்று இரவிலிருந்து சந்தேகத்துக்கு இடமான பல சம்பவங்கள் நடந்துவந்தன. அன்று பூனையொன்றைக் கொன்று வீட்டுக் கதவோரத்தில் போட்டிருந்தார்கள். அதன் பின்னர் வெள்ளிக்கிழமை இரவு எனது கணவரின் கார் டயர் கத்தியால் வெட்டப்பட்டிருந்தது. அதன் பின்னர் சனிக்கிழமை அதிகாலை இந்த சம்பவம் நடந்துள்ளது" என்றார் மந்தனா இஸ்மாயில்.

இலங்கை ஊடகவியலாளர்கள் தொழிற்சங்கம் என்ற அமைப்பொன்றை மந்தனா அண்மையில் உருவாக்கியிருந்தார்.

ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பை வலியுறுத்தி அந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒருவார கால விஜயமாக இலங்கைக்கு இன்று வரவுள்ள ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளையையும் ஊடகவியாளர் அமைப்புகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

வாகன வாடகை சேவை
NATION VIP CAB SERVICE

Nation VIP Cabs
1 மணித்தியாலத்திற்கு 1000/=
Nation popular Travels & Tours
0214 920 920

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013

தியாகராஜா மகேஸ்வரன்


ரணில் விக்கிரமசிங்க

(CE/4912)
தியாகராஜா துவாரகேஸ்வரன்
ஐக்கிய தேசியக் கட்சி
வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
வடகிழக்கை தமிழர் தாயக பூமியாக இணைத்து வடகிழக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடத்தியது
தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது
தமிழர் பிரச்சினையை உலக நாடுகள் முன்னிலையில் பேசித்தீர்க்க சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமாகிய மறைந்த தி.மகேஸ்வரன் தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணி
2005ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்காமல் நாம் செய்த வரலாற்றுத் தவறுதான் இத்தனை துன்ப துயரங்களையும் சுமந்து தமிழ் மக்களை நிர்க்கதியாக்கியது.

பிரிந்த வடகிழக்கை தமிழர் தாயக பூமியாக மாற்ற 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CAMBRIDGE ENGLISH

UNIVERSITY OF CAMBRIDGE



After A/L

**August** மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞான முகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.

**உடனடியாக BRITISH Council இன் ஆதரவுடன் 02.09.2013 இல் ஆரம்பிக்கவிருக்கும் Cambridge - Preliminary Engligh Test (PET) வகுப்பில் சேருங்கள்.**

- இது ஓர் Intermediale B, level பரீட்சையாகும். U.Kஇல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங் களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும்.
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் சேர்ந்தால் கற்க இலகுவாக இருக்கும்

Subjects : Reading, Writing, Listening, Speaking
Exam Fee : Rs.6900/=
Exam Date : 16.11.2013 - Colombo

**Cambridge First Certificate in English**

*FCE is an upper intermediate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken communication. FCE is the most widely taken of the general English exams, with over 250,000 candidates every year. This exam is at CEFR Level CI.*

UK யில் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் IELTS இற்குப் பதிலாக FCE யினை ஏற்றுக்கொள்கின்றனர். இப்பொழுது இந்தப் பரீட்சையில் சித்தியடைந்து நீங்கள் விரும்பிய நேரத்தில் FCE Certificate ஐப் பயன்படுத்தலாம்.

Subjects : Reading; Writing ; Use of English; Listening Speaking

நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாடநெறி இதுவாகும்.

Course Schedule

| | Mon,Tues,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration : | 10 weeks | 10 weeks |
| Time : | 8.30-10.30;10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee : | Rs.8300/= | |
| Exam Date : | 07-12-2013 - Colombo | |

**வகுப்புக்கள் 02.09.2013 இல் ஆரம்பமாகும்.**

For Registration and Further details Contact

## BRITISH COLLEGE OF ENGLISH

**No. 192, Navalar Road, Jaffna.**
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
**Tel : 021 222 0384 - 077 880 3887**

(சி-4417)

**உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு**

துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் (தனியார்) வேலைவாய்ப்பு கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள் , வெல்டர், தச்சு, பெயிண்டர், விமானநிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் கேடரிங் பிரிவிலும் வெற்றிடங்கள். 18 -50 ஆண் பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18,000/-, 35,000/-, 40,000/- (தொழில் அடிப்படையில் சம்பளம்)

உணவு, தங்குமிடம் சகாய விலைகளில்
வருகை தரும் நாளிலே வேலை

**தொடர்பு: 0775561883** (சி-4441)

**விரைவான தொழில்வாய்ப்பு**

விரைவான தொழில் வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜாம், சொக்லட், பிளாஸ்டிக் பை, water bottle, பென்சில், கோழி இறைச்சி தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலை போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர், பொதியிடல் பிரிவு, லேபல் பிரிவு களஞ்சியப் பிரிவுகளுக்கு 18-50 ஆண்-பெண் தேவை.உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் சம்பளம் 17,000/-, 25,000/-, 32,000/- வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள்

**தொடர்பு: 0775561883**
*காரியாலயம், வவுனியா* (சி- 4439)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

- French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

**221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.** *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 , 0212220393

(C-4435)

**தே வை**

கட்டட நிர்மாணத்துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றவராயின கொழும்பு, யாழ்., விஸ்வமடு போன்ற இடங்களில் (கட்டடங்கள், வாய்க்கால், வாவி) வெற்றிடங்கள். மேசன், கையுதவியாளர், தச்சு, பெயின்டர், செடலின் பாஸ் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம் 25,000 /- , 40,000 உணவு, தங்குமிடம் உண்டு.
தொடர்பு : 0775561883 , காரியாலயம், வவுனியா (சி-4440)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்:**
**19.06.1963**



**விண்ணில்:**
**18.08.2011**

*திதி: பஞ்சமி (25.08.2013)*

## அமரர் திருமதி அமிர்தலிங்கம் நந்தகுமாரி

காலமெல்லாம் காத்திடுவாய்
கனவுடனே நாமிருந்தோம்
கனவுகளைப் பொய்யாக்கி
காலனிடம் சென்றதேனோ
கலங்கும் விழி ஓயாமல்
திசையெட்டும் தேடுகின்றோம்
நின்னுருவைக் காணவில்லை
குடும்பத்தின் குலவிளக்காய்
நல்வழியே வழுவாமல் அர்த்தமுடன் வாழ்ந்தீரே
ஆண்டிரண்டு ஆனாலும்
பல வருடம் போனாலும்
அழியாதே உம் நினைவு
எங்களுடன் நீயம்மா!

**என்றும் உங்கள்**
**நினைவுகளுடன்:**
**குடும்பத்தார்**
இராச இல்லம்,
திக்கம், அல்வாய்.

(3645)

**யாழ்ப்பாணத்தில் 09.11.2013 இல் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள்**

# IELTS

BRITISH COUNCIL

We are "IELTS Registration Center for British Council"



- Strategies and techniques are taught to gain a higher score
- All 4 skills are paid equal attention
- Special attention to weak students
- 60 hours of learning in 8 weeks
- Affordable charges

* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் சேர்ந்தால் கற்க இலகுவாக இருக்கும்

**வகுப்புக்கள் - 31.08.2013 ஆரம்பம்**

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration : | 10 weeks | 10 weeks |
| Time : | 8.30-11.30 | 4.00-6.00 - 6.00-8.00 |

கடந்த 10 வருடங்களாக No. 143 - Adiyapatham Road, Thirunelveli. யில் பணியாற்றி இப்போது No. 192 Navalar Road இல் பணியாற்றுகின்றோம்.

For Registration and Further details Contact

## BRITISH COLLEGE OF ENGLISH

**No. 192, Navalar Road, Jaffna.**
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
**Tel : 021 222 0384 - 077 880 3887**

(சி-4417)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அவ்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.